SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

தமிழ்

ஏப்ரல் - 2018

# ZERO CURRENT AFFAIRS

## TNPSC GROUP II

**0%** Effort | **100%** Results

www.tnpscthervupettgam.com

Also available @ BOOKMARK

Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040

**Contact : 044-43533445 | 044-45543082.**

**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy.

# ஏப்ரல் - 2018

## தமிழ்நாடு

1) **தமிழ் இலக்கியம், இலக்கணம், தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் போன்ற துறைகளுக்காக வழங்கப்படும் 2017 ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் விருதுகள் :**

| விருதுகள் | விருது பெறும் அறிஞர்கள் |
|---|---|
| ➢ தமிழ்த்தாய் விருது | பெங்களூரு தமிழ்ச் சங்கம் |
| ➢ கபிலர் விருது | K.V. பாலசுப்பிரமணியன் |
| ➢ உ.வே.சா. விருது | S. கிருஷ்ணமூர்த்தி |
| ➢ கம்பர் விருது | சுகி.சிவம் |
| ➢ இளங்கோவடிகள் விருது | V. நல்லதம்பி |
| ➢ சொல்லின் செல்வர் விருது | முன்னாள் அ.இ.அ.தி.மு.க அமைச்சர் வைகைச் செல்வன் |
| ➢ ஜி.யு.போப் விருது | K.ராஜேஸ்வரி கோதண்டம் |
| ➢ உமறுப்புலவர் விருது | ஹாஜி. M.முகம்மது யூசுஃப் |
| ➢ அம்மா இலக்கிய விருது | M.S. ஸ்ரீலட்சுமி (சிங்கப்பூர்) |
| ➢ முதலமைச்சரின் கணினித் தமிழ் விருது - 2016 | R. துரைப்பாண்டி (Ultimate software solutions - திண்டுக்கல்) |

2) **உலகத் தமிழ்ச் சங்க விருதுகள், 2016:**

| விருதுகள் | விருது பெறும் அறிஞர்கள் |
|---|---|
| ➢ இலக்கிய விருது | ஆண்டியப்பன் (சிங்கப்பூர்) |
| ➢ இலக்கண விருது | பெஞ்சமின் லோபோ (பிரான்சு) (Benjamin Lobo) |
| ➢ மொழியியல் விருது | சுபாஷினி (ஜெர்மனி) |

3) **உலகத் தமிழ்ச் சங்க விருதுகள், 2017 :**

| விருதுகள் | விருது பெறும் அறிஞர்கள் |
|---|---|
| ➢ இலக்கிய விருது | சந்திரிகா சுப்ரமணியன் (ஆஸ்திரேலியா) |
| ➢ இலக்கண விருது | உல்ரிகே நிக்லஸ் [Ulrike Niklas] (ஜெர்மனி) |
| ➢ மொழியியல் விருது | மகாதேவ அய்யர் ஜெயராம சர்மா (ஆஸ்திரேலியா) |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

4) **கண்ணதாசன் விருது** 2018: கோவை கண்ணதாசன் கழகத்தினரால் வழங்கப்படும் இவ்விருதானது பாடகர் **எஸ்.பி. பாலசுப்பிரமணியம்** அவர்களுக்கும் எழுத்தாளர் **மாலன்** அவர்களுக்கும் வழங்கப்பட்டது.

5) **DefExpo இந்தியா - 2018:** பாதுகாப்புத் தளவாடங்கள் கண்காட்சியினுடைய (Defence Expo) 10-வது பதிப்பினை பிரதம அமைச்சர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். 4 நாட்கள் **(2018 ஏப்ரல் 11 முதல் 2018 ஏப்ரல் 14 வரை)** தொடர்ந்து நடைபெற்ற இக்கண்காட்சியானது காஞ்சிபுரம் மாவட்டத்தின் திருப்போரூர் தாலுக்காவிலுள்ள **திருவிடந்தையில்** நடைபெற்றது. இதன் கருத்துரு : **"இந்தியா வளர்ந்துவரும் பாதுகாப்புத் தளவாடங்களுக்கான உற்பத்தி மையம்"** ["India : The Emerging Defence Manufacturing Hub"]

6) **எனது பசுமைத் தொட்டி** (My Green Bin) **:** இது தொழு உரம் தயாரிக்கும் வகையில் அமைக்கப்பட்ட தொட்டி (Organic Composter) ஆகும். இத்தொட்டி மக்கும் குப்பைகளைத் தொழு உரமாக (Garbages into an organic compost) மாற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வகைத் தொட்டியானது **அரக்கோணம் நகராட்சியில்** (Arakkonam Municipality) வாழும் அனைத்து மக்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

7) முன்பதிவு செய்யப்படாத இரயில் பயணச் சீட்டுகளைத் (Train tickets for unreserved) **தமிழ் மொழியிலேயே அச்சடிக்கும் முறை** 2018 **ஏப்ரல்** 25 **முதல் மீண்டும்** நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. பயணச் சீட்டுகளில் இடம் பெறும் மொழியாக ஆங்கிலமும் இந்தியுமே இதுவரை இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

8) **கூட்டுறவுச் சங்கங்களுக்கானத் தேர்தல் (Elections for cooperative societies):** கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஐந்து கட்டங்களாக (Five phases) நடைபெறும் என்று தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கத் தேர்தல் ஆணையரான (Commissioner of Tamil Nadu State Co-operative Societies Election Commission) M.இராஜேந்திரன், அறிவித்துள்ளார்.

9) **உழவன் செயலி (Uzhavan App) :** தமிழ் மற்றும் ஆங்கிலம் என இரண்டு மொழிகளிலும் இயங்கும் உழவன் செயலியானது தமிழக முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டது. பயிர்க் காப்பீடு (Crop insurance), வேளாண் மானியங்கள் (Farm Subsidies) மற்றும் வானிலை முன்னறிவிக்கை (weather forecast report) ஆகியவை தொடர்பான விவரங்களை இச்செயலியின் மூலமாக விவசாயிகள் அறிந்து கொள்ளலாம்.

10) **அம்மா இலவச வை-ஃபை மண்டலங்கள் (Amma Free Wi-Fi Zones):** தமிழக அரசானது 2018 **ஏப்ரல்** 5 அன்று வை-ஃபை மண்டலங்களை **ஐந்து** முக்கிய நகரங்களில் தொடங்கி வைத்துள்ளது. அவையாவன.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

- சென்னை - மெரினா கடற்கரையில் உள்ள உழைப்பாளர் சிலை (Labour statue at Marina)
- சேலம் - மத்தியப் பேருந்து நிலையம்
- திருச்சி - மத்தியப் பேருந்து நிலையம்
- கோயம்புத்தூர் - காந்திபுரம் பேருந்து நிலையம்
- மதுரை - எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம் (மாட்டுத் தாவணி)

(இந்த வை-ஃபை சேவையானது முதல் 20 நிமிடங்களுக்கு இலவசமாகவும் அடுத்த ஒவ்வொரு மணி நேரத்திற்கும் 10 ரூபாய் வீதத்திலும் கட்டணம் செலுத்திப் பயன்படுத்தும் வகையில் வழங்கப்படவுள்ளது.)

11) **12-ம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள்** (12th century Inscription)**: விருதுநகர் மாவட்டத்தின் இராஜபாளையம் தாலுக்காவில் உள்ள மாங்குடி கிராமத்தில்** 12-ம் நூற்றாண்டைச் சேர்ந்த பழைய கல்வெட்டுக்கள், நந்தி சிலை, ரோமானிய பாணியிலான செந்நிற பானைகள் (Romanian Style Red pots) மற்றும் இரும்புக் கத்திகள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டுள்ளன (சங்க காலத் தமிழ்ப் புலவரான 'மாங்குடி மருதனார்' இந்தக் கிராமத்தில் வாழ்ந்தவராவார். மேலும் இவர் பாண்டிய மன்னன் தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டிய நெடுஞ்செழியனின் சமகாலத்தவராவார்).

12) **தமிழ்நாடு டிஜிட்டல் நூலகமானது (Tamil Nadu Digital Library)** தமிழக முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது. இதன் வலைதள முகவரி (www.tndigitallibrary.ac.in) என்பதாகும்.

13) அண்ணாப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக (Vice Chancellor of Anna University) திரு. **M.K.சூரப்பா (Mr.M.K.Surapa)** அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

14) **அனிதா சாட் (Anitha SAT):** 500 கிராம் எடை கொண்ட மிகவும் இலகுவான, கூம்பு வடிவ அனிதா சாட் செயற்கைக் கோளினை திருச்சியைச் சேர்ந்த **வில்லெட் ஓவியா** (Villet Oviya) என்னும் மாணவி உருவாக்கியுள்ளார். 17 வயதே நிரம்பிய இம்மாணவி 12-ம் வகுப்பு படித்து வருகின்றார். **மெக்சிகோவின் அஸ்ட்ரா ஏவுதளத்திலிருந்து** (Aztra Lab, Mexico) விண்ணில் செலுத்தப்பட்ட இச்செயற்கைக் கோளானது புவி வெப்பமயமாதல் (Global warming) மற்றும் காற்று மாசுபாடு (Air Pollution) போன்ற நிகழ்வுகளின் விளைவுகளைப் பற்றி அறிய உதவுகிறது.

15) **நீர் சுத்திகரிப்பு ஆலை** (Water Desalination Plant)**: மின் காந்த அலைகளைக்** (Electromagnetic waves) கொண்டு இயங்கும் வகையில் அமைக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு ஆலையின் முதல் கட்டப் பணிகளானது **சிவகங்கை** மாவட்டத்திலுள்ள **இளையான்குடி மற்றும் சூராணம்** ஆகிய பகுதிகளில் தொடங்கிவைக்கப்பட்டது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

16) தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் (Banwarilal purohit) **'ஸ்வச் திருவள்ளுவர்' விழிப்புணர்வு வாகனத்தை** (Swachh Thiruvalluvar Awareness Van) **திருவள்ளூர் மாவட்டத்தில்** தொடங்கி வைத்தார். இது "தூய்மை இந்தியா திட்டத்தின்" (Swachh Bharat Scheme) கீழ் வரும் விழிப்புணர்வுக்கான முன்னெடுப்பாகும்.

17) **தமிழ்ச்சுடர் விருது :** கம்பன் தமிழ்க் கழகத்தினரால் அளிக்கப்படும் இவ்விருது பேராசிரியர் **ருக்மணி பன்னீர் செல்வம்** (Prof. Rukmani Panneer Selvam அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

18) **இராமானுஜர் 1001 :** இராமானுஜரின் 1001-வது அவதாரத் திருவிழா ஸ்ரீபெரும்புதூரில் (Sriperumpudur) 2018 ஏப்ரல் 12 அன்று விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

19) **புனித ஆண்ட்ரூ தேவாலயம் (St.Andrew's church/The kirk):** சென்னை எழும்பூரில் உள்ள இந்தத் தேவாலயமானது அண்மையில் தனது 200 வது ஆண்டு விழாவினைக் (200th Anniversaly) கொண்டாடியுள்ளது. ஸ்காட்லாந்து நாட்டினரால் (Scottish Community) கட்டப்பட்ட இந்தத் தேவாலயமானது சென்னையின் பழம் பெரும் தேவாலயங்களுள் ஒன்றாகும்.

20) **இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தால்** (Indian Institute of Technical Education) அளிக்கப்படும் இந்த ஆண்டுக்கான சிறந்த பொறியியல் மாணவருக்கான விருதானது (Best Engineering student of the year) சேலத்தைச் சேர்ந்த **ஜனனி** என்னும் மாணவிக்கு வழங்கப்பட்டுள்ளது.

21) சென்னை மெட்ரோ ரயில் நிறுவனமும் (Chennai Metro) பாரத ஸ்டேட் வங்கியும் (State Bank of India) கூட்டாக இணைந்து, பயணிகளுக்காக **'SBI Pay'** எனும் செயலியினை (App) உருவாகியுள்ளன.

22) **வண்டலூர் உயிரியல் பூங்காவுக்கான வலைதளம் மற்றும் செயலி (Website and App for Vandaloor Zoological Park):** வண்டலூர் உயிரியல் பூங்காவிலுள்ள விலங்குகள் மற்றும் பறவைகளைப் பற்றி விரிவாகத் தெரிந்து கொள்ள உதவும் வகையில் www.aazp.in என்னும் வலைதளமும் 'Vandaloor zoo' என்னும் செயலியும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

23) **தமிழ்நாடு பாதுகாப்பு நாற்கரச் சாலை (Tamil Nadu Defence Quad) :** தமிழ்நாட்டில் **இராணுவத் தளவாடங்கள் உற்பத்திக்கான மேம்பட்ட வழித்தடம்** (Defence Production Corridors) அமைக்கப்படும் என மத்திய நிதி அமைச்சர் **2018-19** ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் போது (Budget 2018-19) தெரிவித்தார். இவ்வழித்தடமானது **சென்னை, ஒசூர், கோயம்புத்தூர், சேலம், மற்றும் திருச்சிராப்பள்ளி** ஆகிய நகரங்கள் வழியாக அமைக்கப்பட உள்ளது.

## தேசம்

1) **மதம் மாறும் உரிமையானது அடிப்படை உரிமையாகும் (Right to Convert is a Fundamental Right)** : உச்ச நீதிமன்றமானது **ஹாதியா வழக்கில்** (Case of Hadiya) **2018 மார்ச் 8** அன்று வழங்கிய தீர்ப்பின் படி **'மதம் மாறும் உரிமையானது'** (Right to convert) **அடிப்படை உரிமைகளுள்** ஒன்றாகும். அரசியலமைப்புச் சட்டத்தின் 25 முதல் 28 வரையிலான விதிகள் சமய சுதந்திரத்துக்கான உரிமைகளைப் பற்றி (Right to Freedom of Religion) விவரிக்கின்றன.

2) **ஜி.எஸ்.டி இ-வழி ரசீது (GST e-way Bill)** : இந்த இ-வழி ரசீதானது 50,000 ரூபாய்க்கு அதிகமாக **மாநிலங்களுக்கிடையில்** (Interstate transportation) நடைபெறும் அனைத்து வகையிலான சரக்குப் போக்குவரத்திற்கும் (சாலை வழி, இரயில்வே, வான்வழி, மற்றும் நீர்வழி) அவசியமாகிறது. இந்த நடைமுறையானது **2018 ஏப்ரல் 1** அன்று முதல் நடைமுறைக்கு வருகின்றது. **மாநிலங்களுக்குள்ளேயே** (inter state) நடைபெறும் சரக்குப் போக்குவரத்திற்கான இ-வழி ரசீதானது 2018 ஏப்ரல் 15 அன்று முதல் நடைமுறைக்கு வருகின்றது. [மாநிலத்திற்குள்ளேயான இ-வழி ரசீது முறையினை நடைமுறைப்படுத்திய முதல் மாநிலம் **கர்நாடகமாகும்.** 2017 செப்டம்பரில், கர்நாடகா இத்திட்டத்தினை அமல்படுத்தியது].

3) **ஒடிசா** மாநிலத்தில் பேசப்பட்டு வரும் **வால்மீகி (Walmiki) மற்றும் மல்ஹார் (Malhar)** என்னும் அழிவின் விளிம்பிலுள்ள இரு மொழிகளை ஐதராபாத் பல்கலைக் கழகமானது (University of Hyderabad) கண்டறிந்துள்ளது.

4) **நகரங்களின் தரவுகளுக்கான சான்றிதழ் அளிக்கும் சர்வதேசக் குழு (World Council on City Data Certification)** : இக்குழு வெளியிட்டுள்ள 50 நகரங்களின் பட்டியலில் சென்னை இடம் பெற்றுள்ளது. இப்பட்டியலானது டாடா அறக்கட்டளை (Tata Trusts) மற்றும் நகரத் தரவுகளுக்கான சர்வதேச கவுன்சில் (World Council on City Data) ஆகியவற்றால் வெளியிடப்பட்டுள்ளது. இதன் நோக்கமானது நகர்புற உள்கட்டமைப்பை (Urban infrastructure) வலுப்படுத்துவதும் நகர மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதும் ஆகும்.

5) **பீகார் அரசானது** அரசுத் தேர்வுகளை எழுதுவதில் பெண்களுக்கான கட்டணத்தைக் குறைத்துள்ளது. முதல் நிலைத் தேர்வுகளை (Preliminary) எழுதுவதற்காண கட்டணம் ரூபாய் 600-லிருந்து ரூபாய் 160 ஆகவும், முதன்மைத் தேர்வுகளை (Mains) எழுதுவதற்கான கட்டணம் ரூபாய் 750-லிருந்து ரூபாய் 200 ஆகவும் குறைத்துள்ளது.

6) JLL அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள சிறந்த **நகரங்களுக்கான சர்வதேச குறியீட்டில் (Global city Momentum Index-2018)** தெலுங்கானாவின்

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

**ஐதராபாத்** நகரம் (Hyderabad) முதல் இடத்தைப் பிடித்துள்ளது. இப்பட்டியலில் **சென்னை 14-ம்** இடத்தில் உள்ளது.

7) **சிக்கிம்** மாநில அரசானது இயற்கை விவசாயம் செய்யும் (Organic Farming) விவசாயிகளுக்கு ஓய்வூதியமாக (Pension) 1000 ரூபாய் வழங்க முடிவு செய்துள்ளது.

8) **இந்தியாவின் சிறந்த ஊராட்சி (Best Panchayat of India):** மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள **திகம்பர்பூர் ஊராட்சியானது** இந்தியாவின் மிகச் சிறந்த ஊராட்சிக்கான விருதினைப் பெற்றுள்ளது. இவ்விருதானது பஞ்சாயத்துராஜ் அமைச்சகத்தினால் (Ministry of Panchayat Raj) வழங்கப்படுகிறது.

9) **பன்முனை பண்டகப் பூங்கா (Multi Modal Logistics Park):** பன்முனை பண்டகப் பூங்காவானது **கோவாவின் மத்கான் நகருக்கு** (Madgaon) அருகில் உள்ள **பல்லி நிலையத்தில்** (Balli station) தொடங்கி வைக்கப்பட்டது.

10) தெலுங்கானாவின் **அடிலாபாத் டோக்ரா (Adilabad Dokra)** மற்றும் **வாரங்கல் துர்ரிகள் (Warrangal Durries)** ஆகிய கைவினைப் பொருட்களுக்கு **புவிசார் குறியீடு அந்தஸ்து** (GI tag) வழங்கப்பட்டுள்ளது.

11) **5000MW** மின் உற்பத்தித்திறன் கொண்ட **உலகிலேயே மிகப்பெரிய சூரிய ஒளி மின் உற்பத்திப் பூங்காவானது** (World's largest solar park) குஜராத்தின் **தோலெராவில் (Dholera)** தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. [கர்நாடகாவில் உள்ள **சக்தி ஸ்தலா (Shakti sthala)** சூரிய ஒளி மின் உற்பத்திப் பூங்காவின் மொத்த மின் உற்பத்தித் திறன் 2000 MW ஆகும்.]

12) **இந்தியாவின் மிகவும் தூய்மையான விமான நிலையம் :** இந்திய விமான நிலைய ஆணையகம் (Airport Authority of India) வெளியிட்டுள்ள அறிக்கையின் படி **மங்களூர் சர்வதேச விமான நிலையமானது** (Mangalore International Airport) இந்தியாவிலேயே மிகவும் தூய்மையான விமான நிலையம் (Cleanest Airport in India) என்ற சிறப்பினைப் பெற்றுள்ளது.

13) சிகரெட் அட்டைகளில் 1800-11-2356 என்ற இலவச உதவி மைய எண்ணினை (Toll free number) அச்சிட்டு விற்பனை செய்ய வேண்டுமென்ற உத்தரவினை மத்திய அரசு பிறப்பித்துள்ளது.

14) **மெட்ராஸ் உயர் நீதிமன்றமானது (Madras High Court) மின் வழி நீதிமன்ற கட்டணம் செலுத்தும் வசதியினைத் (fee payment facility)** தொடங்கியுள்ளது. இவ்வாறு இவ்வசதி தொடங்கப்படுவது தென்னிந்தியாவிலேயே முதன் முறையும் இந்திய அளவில் எட்டாவது முறையும் ஆகும்.

15) இந்திய எஃகு உபயோகிப்பாளர் கூட்டமைப்பு (Steel users Federation of India - SUFI) வெளியிட்டுள்ள அறிக்கையின் படி உலகின் இரண்டாவது பெரிய எஃகு

உற்பத்தி (Manufacturer of crude steel) செய்யும் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது. சீனா, இப்பட்டியலில் முதலிடம் வகிக்கிறது.

16) **பெங்களூர் நகரமானது மேம்பட்ட போக்குவரத்து மேலாண்மை தீர்வை** (Intelligent Traffic Management Solution) காணும் திட்டத்தினுடைய முன் மாதிரியை முதன் முதலாகப் பரிசோதித்துப் பார்த்தது.

17) **5 ஜி ஆய்வகம் (5G Lab)** : இந்தியாவின் முதலாவது **ஐந்தாம் தலைமுறை மாபெரும் மிமோ வானொலி ஆய்வகமானது** (5G Massive MIMO Radio Lab) **புது தில்லி ஐஐடியில் (IIT New Delhi)** 2018 ஏப்ரல் 13 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்த ஆய்வகமானது "பாரதி தொலைத் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மையியல் பள்ளியில்" (Bharathi school of Telecom Technology and Management) இருந்து செயல்பட உள்ளது.

18) **BS - V1 எரிபொருள் (BS-V1 Fuel) : டெல்லி அரசானது** (Delhi Government) "மிகவும் தூய்மையான பாரத நிலை V1 வகை எரிபொருளை (பெட்ரோல் மற்றும் டீசல் இரண்டும்)" மட்டுமே (Ultra - clean Bharat Stage V1 grade fuel) பயன்படுத்தும் நடைமுறையினை அமல்படுத்த இருக்கிறது. சுற்றுச் சூழல் மாசுபாட்டினைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் கொண்டு வரப்பட்ட இத்திட்டமானது, 2018 **ஏப்ரல் 1 முதல்** டெல்லியில் மட்டும் நடைமுறைக்கு வருகின்றது. இந்தியாவிலேயே டெல்லி மாநகரில் தான் BS-VI நடைமுறையானது முதன் முதலாக அமலுக்கு வருகிறது, தேசிய அளவில் இந்த நடைமுறையானது 2020 **ஏப்ரல்** முதல் அமல்படுத்தப்பட இருக்கிறது. [BS-VI என்பது ஐரோப்பாவில் பயன்படுத்தப்படும் Euro VI நடைமுறைக்கு இணையானது ஆகும்].

19) **இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல் அறிக்கை (Internet Security Threat Report)** : சிமான்டெக் நிறுவனம் வெளியிட்டுள்ள இவ்வறிக்கையின் படி, இணையத் தாக்குதல்களுக்கு உள்ளாகும் நாடுகளின் பட்டியலில் **இந்தியா மூன்றாவது இடத்தில்** உள்ளது. **(கடந்த ஆண்டில் இந்தியா நான்காவது இடத்தில் இருந்தது).** இப்பட்டியலில் அமெரிக்கா (USA) மற்றும் சீனா ஆகிய நாடுகள் முதல் இரண்டு இடங்களில் உள்ளன.

20) **தேசிய உயர்கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசைப் பட்டியல்** - 2018 **[National Institutional Ranking Framework 3 (NIRF 3) Rankings 2018] :** மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள இந்தப் பட்டியலில் பெங்களூரில் உள்ள **இந்திய அறிவியல் பல்கலைக்கழகம் (IISC - Bangalore)** முதல் இடத்தைப் பிடித்துள்ளது. மேலும் டெல்லி எய்மஸ் மருத்துவ நிறுவனமானது (AIIMS - Delhi) இந்தியாவிலேயே மிகச் சிறந்த மருத்துவக் கல்லூரியாகத் (Best Medical College in the Country) தேர்வு செய்யப்பட்டுள்ளது.

21) **போட்டி ஒழுங்குமுறை ஆணையம் (competition commission of India):** மத்திய அமைச்சரவைக் குழுவானது போட்டி ஒழுங்குமுறை ஆணையத்தில் உள்ள

உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்கத் திட்டமிட்டுள்ளது. இதன்படி ஒரு தலைவர் மற்றும் ஆறு உறுப்பினர்களைக் கொண்ட (One Chairperson and six members) இந்த ஆணையத்தின் எண்ணிக்கையானது ஒரு தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட (One Chairperson and three members) ஆணையமாக மாற்றப்பட உள்ளது.

22) **உத்தரகாண்ட் மாநிலத்தின் இரண்டாவது மாபெரும் உணவுப் பூங்கா (Uttarakant's second Mega Food park):** இந்த இமாலய உணவுப் பூங்காவானது உத்தம் சிங் நகர் மாவட்டத்தின் காசிப்பூரில் (Kashipur) உள்ள மகுவாகேரா கஞ்ச் (Mahuakhera Gaj) என்னும் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தின் முதலாவது மாபெரும் உணவுப் பூங்காவானது ஹரித்துவாரில் (Haridwar) அமைக்கப்பட்டுள்ளது.

23) மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத் திருத்த மசோதாவுக்கு (Protection of Human Rights (Amendments) Bill, 2018) மத்திய அமைச்சரவைக் குழுவானது 2018 ஏப்ரல் 5 அன்று ஒப்புதல் வழங்கியது. இதற்கு முன் இந்த சட்டமானது 1993 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

24) மத்திய அரசானது **ஆக்சிடாசின் ஹார்மோன்களின் (Oxytocin)** இறக்குமதியைத் தடைசெய்துள்ளது. இத்தடையானது 2018 ஏப்ரல் 7 அன்று முதல் அமலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. கால்நடை பராமரிப்புத் துறையில் (Livestock industry) ஆக்சிடாசின் ஹார்மோன்கள் தவறாகப் பயன்படுத்தப்படுதலைத் தவிர்க்கவே இந்த இறக்குமதித் தடையானது கொண்டு வரப்பட்டுள்ளது.

25) இந்திய தனித்துவ அடையாள ஆணையமானது (Unique Identification Authority of India) **பாதுகாப்பான எண்ணியல் முறையிலான OR குறியீட்டினை இ-ஆதாரில் (QR code on e-Aadhaar)** பயன்படுத்தும் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

26) **எட்டாவது மேடைக் கலைகளுக்கான ஒலிம்பிக் நிகழ்வானது** ($8^{th}$ edition of Theatre Olympics) மும்பையில் முடிவுற்றது. 2018 பிப்ரவரி மாதம் புது தில்லியில் தொடங்கப்பட்ட இந்நிகழ்வானது 51 நாட்களாக இந்தியா முழுவதும் உள்ள 17 நகரங்களில் நடைபெற்றது.

27) **ஒரே தேசம் ஒரே தேர்தல்** (One nation one election): மக்களவைக்கும் (Lok Sabha) அனைத்து மாநில சட்டப் பேரவைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது (Simultaneous elections) தொடர்பான வெள்ளை அறிக்கையினை (White paper draft) **நீதியரசர் B.S. சவுஹான் குழு** (Justice B.S. Chauhan Committee) வெளியிட்டுள்ளது.

28) சுந்தரவனக் காடுகளுக்கு (Sunderban Reseve Forest) ராம்சார் ஈரநிலங்களுக்கான அந்தஸ்து (Ramsar site status) பெறுவதற்கான முயற்சிகளைத் தொடங்க மேற்கு வங்க அரசானது ஒப்புதல் அளித்துள்ளது.

29) **தூப் திட்டம் (Project Dhoop):** வைட்டமின் D-ன் முக்கியத்துவம் பற்றியும் அதன் குறைபாட்டால் ஏற்படும் விளைவுகள் (Vitamin D Deficiency) பற்றியும் இளைய தலைமுறையினரிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே 'தூப் திட்டத்தின்' நோக்கமாகும். இத்திட்டமானது இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (Food safety and security Authority of India), என்.சி.இ.ஆர்.டி (NCERT) மற்றும் புது தில்லி நகராட்சிக் குழு (New Delhi Municipality Council) ஆகியவற்றின் கூட்டு முயற்சியினால் உருவாக்கப்பட்டது ஆகும். மேலும் இத்திட்டம் பள்ளிகளில் காலை நேர ஒன்று கூடுதல் (School assembly) நிகழ்வினை **முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி** வரையிலான நேரத்திற்கு மாற்றியமைக்க அறிவுறுத்துகிறது.

30) **இ-விதான் திட்டம் (e-Vidhan Project):** இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களின் சட்டமன்றங்களையும் கணினிமயமாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன் மூலம் காகிதமில்லா (Paperless) நிர்வாகமானது உறுதி செய்யப்படும்.

31) **பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கான அனுமதி வரம்பு (Protected Area Permit Regime):** வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், எல்லைப் புற மாநிலங்களான (Border States) நாகாலாந்து, மிசோரம், மற்றும் மணிப்பூர் ஆகியவற்றுக்குச் சென்று பார்வையிடுவதற்கான அனுமதியினை மத்திய உள்துறை அமைச்சகமானது வழங்கியுள்ளது. ஐந்து ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் வகையில் பிறப்பிக்கப்பட்ட இந்த உத்தரவானது 2018 ஏப்ரல் 1 முதல் நடைமுறைக்கு வருகிறது.

32) **ஆர்க்கியோ புரோமா (Archaeo Broma):** தேசிய அளவிலான **உணவுத் தொல்லியல் மாநாடான (Nationwide Food Archaelogy Conference)** ஆர்க்கியோ புரோமா **மும்பையில்** நடைபெற்றது. இவ்வகை மாநாடானது இந்தியாவில் நடைபெறுவது இதுவே முதன் முறையாகும்.

33) பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் மீதான வன்முறைகள் தடுப்புச் சட்டம் (Scheduled caste's and scheduled Tribes (Prevention of Atrocities Act), 1989) தொடர்பான புதிய செயல் முறைகளை (directions) உச்ச நீதிமன்றம் (Supreme court) பிறப்பித்துள்ளது.

34) அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 29 மற்றும் விதி 30 ஆகியவற்றின் கீழ் சிறுபான்மையினருக்கான கல்வி நிறுவனங்கள் (Minority Educational Institution) உருவாக்கப்படுதலைத் தீர்மானிக்கும் உண்மையான அதிகார வரம்பானது (Original Jurisdiction) தேசிய சிறுபான்மையினருக்கான கல்வி நிறுவனங்கள் ஆணையத்திடம் (National Commission for Minority Education Institutions) உள்ளது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

35) புதிதாக உருவாக்கப்பட்ட **'வடகிழக்கு மாநிலங்களுக்கான நிதி ஆயோக் மன்றத்தின்'** (NITI Forum for North East) முதல் கூட்டமானது **திரிபுராவின்** தலைநகரமான அகர்தலாவில் நடைபெற்றது.

36) உயிர்த்திரள் மேலாண்மை (Biomass Management) தொடர்பான **'தூய்மையான காற்றும் சிறப்பான வாழ்வும்'** (Cleaner Air Better Life) என்ற திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட செயலாக்கக் குழுவின் அறிக்கையை (Task force report) நிதி ஆயோக் (NITI Aayog) வெளியிட்டது.

37) **மதுபானி ஓவியங்கள் (Madhupani Paintings):** இந்தியாவின் மிகவும் தூய்மையான இரயில் நிலையங்களுள் ஒன்றான பீகாரின் மதுபானி இரயில் நிலையமானது (Madhupani Railway station) மதுபானி / மிதிலா வகை ஓவியங்களால் வண்ணம் தீட்டப்பட்டு புதுப்பொலிவு பெற்றுள்ளது.

## சர்வதேசம்

1) குடியரசுத் தலைவர் **ராம்நாத் கோவிந்த்** அவர்கள் அண்மையில் அரசுமுறை சுற்றுப்பயணம் மேற்கொண்ட **ஆப்பிரிக்க நாடுகள்** (African Countries):

| | |
|---|---|
| ➢ **பூமத்திய கினியா** (Equatorial Guinea) | பூமத்திய கினியாவுக்கு அரசுமுறை, சுற்றுப் பயணம் மேற்கொண்ட முதல் இந்தியக் குடியரசுத் தலைவர். |
| ➢ **சுவாசிலாந்து** (Swaziland) | சுவாசிலாந்துக்கு அரசுமுறை சுற்றுப்பயணம் மேற்கொண்ட முதல் இந்தியக் குடியரசுத் தலைவர் |
| ➢ **ஜாம்பியா** (Zambia) | 29 ஆண்டுகளுக்கு பின் இந்தியக் குடியரசுத் தலைவர் ஜாம்பியாவுக்கு அரசுமுறை சுற்றுப் பயணம் மேற்கொண்டார். |

2) வங்கதேச அரசானது (Bangladesh government), அரசுப் பணிகளுக்கான இட ஒதுக்கீட்டு முறையினை (Quota system) ரத்து செய்துள்ளது.

3) **தீமை வரி அல்லது சர்க்கரை வரி (Sin tax or Sugar tax) : இங்கிலாந்து அரசானது** (UK government) மென் பானங்கள் (Soft drinks) மீது தீமை வரியினை விதித்துள்ளது. உடற் பருமன் (Obesity) மற்றும் நோய் தொடர்பான உபாதைகளைக் (Sugar related diseases) கட்டுப்படுத்த இவ்வரியானது விதிக்கப்படுகிறது.

4) **கிளவுட் சட்டம் (Cloud Act):** 'வெளி நாடுகளில் சட்டரீதியாகத் தகவல்களைப் பயன்படுத்தும் முறையைத் தெளிவுபடுத்தும் கிளவுட் சட்டத்திற்கு (Clarifying Lawful overseas use of data Act - Cloud Act) அமெரிக்க அதிபர் ஒப்புதல் அளித்துள்ளார். இச்சட்டமானது பிற நாடுகளில் இருந்து கிடைக்கப் பெறும் தரவுகள் (data) தொடர்பான, சட்டங்கள் நடைமுறைப் படுத்துதலுக்கான (Law

enforcement) கோரிக்கைகளுக்கு விளக்கம் அளிக்கும் செயல் (Procedures and Processes) முறைகளை விவரிக்கிறது.'

5) **நீதியரசர் ராஜேஷ் பின்டால் குழு (Justice Rajesh Bindal Committee):** இக்குழுவானது **நாடுகளுக்கிடையே உள்ள பெற்றோர்கள் குழந்தையைப் பிரித்தல் தொடர்பான பிரச்சனைகள் தீர்வு ஆணையத்தை (Inter Country Parental child Removal Disputes Resolution Authority)** அமைக்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

6) **ஆசியன் பிரீமியம் (Asian Premium)** : எண்ணெய் மற்றும் பெட்ரோலியம் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பினால் (OPEC - Organization of the Petroleum Exporting Countries) நிர்ணயிக்கப்படும் ஆசியன் பிரிமியத்திற்கு எதிராகக் குரல் எழுப்ப இந்தியாவும் சீனாவும் பிற ஆசிய நாடுகளுடன் ஒருங்கிணைந்துள்ளன. ஆசிய நாடுகளுக்கு எண்ணெய் விற்கப்படும் போது, அந்த நாடுகளின் மீது ஒபெக் (OPEC) நாடுகளால் விதிக்கப்படும் **கூடுதல் கட்டணமே** ஆசியன் பிரீமியம் ஆகும்.

7) **மாசுபாடு முன்னறிவிப்பு அமைப்பு (Pollution Forecast System):** இந்தியா, அமெரிக்கா (USA) மற்றும் பின்லாந்து (Finland) ஆகிய நாடுகள் கூட்டாக இணைந்து புதிய மாசுபாடு முன்னறிவிப்பு அமைப்பினை உருவாக்கியுள்ளன.

8) **2017 ஆம் ஆண்டின் உலகின் இரண்டாவது பெரிய கைபேசி உற்பத்தியாளராக (2nd largest producer of mobile phones) இந்தியா உருவெடுத்துள்ளது.** இரண்டாம் இடத்தில் இருந்த வியட்நாமைப் பின்னுக்குத் தள்ளி இந்தியா இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளது. கைபேசி உற்பத்தியில் சீனா முதல் இடத்தில் உள்ளது.

9) **நிலையான சிந்து நதி நீர்ப் பங்கீட்டு ஆணையும் (Permanent Indus Commission)** : இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான, நிலையான சிந்து நதி நீர்ப் பங்கீட்டு ஆணையத்தின் **114 வது கூட்டம் புதுதில்லியில்** நடைபெற்றது. இந்த ஆணையமானது 1960ல் மேற்கொள்ளப்பட்ட சிந்து நதி நீர் ஒப்பந்தத்தின் படி (Indus Water Treaty 1960) உருவாக்கப்பட்டது ஆகும்.

10) **சர்வதேச பாதுகாப்புக்கான மாஸ்கோ மாநாடு (Moscow conference on International security 2018)** : ரஷ்யத் தலைநகரான மாஸ்கோவில் நடைபெற்ற இம்மாநாட்டின் ஏழாவது பதிப்பில் (7th edition) மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டார்.

11) **பான்முன்ஜோம் பிரகடனம் (Panmunjom Declaration)** : வட கொரிய அதிபர் கிம் ஜாங் உன் (Kim Jong - un) மற்றும் தென் கொரிய அதிபர் முன் ஜே இன் (Moon Jae-in) ஆகியோர் கூட்டாக இணைந்து, **2018 ஏப்ரல் 27** அன்று **பான்முன்ஜோம் பிரகடனத்தில் (Panmunjom Declaration)** கையெழுத்திட்டனர். [பான்முன்ஜோம் நகரமானது தென் கொரியாவில் உள்ளது] இப்பிரகடமானது அணு



SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

ஆயுதங்கள் (Nucleal weapons), அமைதி ஒப்பந்தம் (Peace Deal) மற்றும் கொரிய தீபகற்பத்திற்கிடையேயான தகவல் தொடர்பு (Inter Korean Communication) ஆகியவற்றைப் பற்றிய விவரங்களை உள்ளடக்கியதாகும்.

12) **ஆப்பிரிக்க ஆசிய கிராமப்புற வளர்ச்சி அமைப்பானது (African Asian Rural Develoment Organization - AARDO)** உணவுப் பாதுகாப்பு (Food Security) விவசாயம் (Agriculture) மற்றும் மீன்பிடித்தல் (Fisheries) போன்றவை தொடர்பான பயிற்சிப் பட்டறையை (Workshop) கேரள மாநிலத்தின் **கொச்சியில்** (Kochi) நடத்தியது.

13) இந்தியப் பெருங்கடலின் (Indian Ocean) வடிவத்தினை மாற்றும் வகையில் ஒரு கால்வாயினை (Canal) அமைப்பதற்கு ***சீனா*** திட்டமிட்டுள்ளது. **தாய்லாந்தில்** அமைக்கப்பட இருக்கும் 100 கி.மீ நீளம் கொண்ட இக்கால்வாயானது தாய்லாந்து நாட்டை இரு பகுதிகளாகப் பிரிக்கும் வகையில் அமைக்கப்பட உள்ளது.

14) சர்வதேச புதுப்பிக்கத்தக்க ஆற்றல் முகமையானது (International Renewable Energy Agency) தனது நீண்ட காலத்திற்கான, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்கள் பற்றிய கண்ணோட்டத்தினை (Outlook) **“சர்வதேச ஆற்றல் மாற்றம்: 2050-ம் ஆண்டுக்கான பாதை”** (Global Energy Transformation: A Road map to 2050) என்னும் தலைப்பின் கீழ் வெளியிட்டுள்ளது.

## *மாநாடுகள் & கருத்தரங்குகள்*

1) **சர்வதேச பண்டகப் போக்குவரத்து மாநாடு 2018 (Global Logistics summit 2018):** பண்டகப் போக்குவரத்தினை மேம்படுத்துதல், மாநிலங்களுக்கிடையிலான தொடர்பினை வலுப்படுத்துதல் (intra-state connectivity) மற்றும் சர்வதேச வர்த்தகத்தை (International trade) ஊக்குவித்தல் ஆகிய நோக்கங்களுடன் நடந்தேறிய இம்மாநாடானது 2018 ஏப்ரல் 5 மற்றும் 6 ஆகிய நாட்களில் புது தில்லியில் நடைபெற்றது. வர்த்தகம் மற்றும் தொழில்துறைக்கான மத்திய அமைச்சகம் (Ministry of Commerce and Industry) மற்றும் உலக வங்கிக் குழுமம் (World Bank Group) ஆகியவை இணைந்து இம்மாநாட்டினை நடத்தின.

2) **சர்வதேச எக்ஸ்போ 2020 (World Expo 2020):** துபாயில் நடைபெற இருக்கும் புகழ்பெற்ற உலக எக்ஸ்போ 2020 கண்காட்சியில் இந்தியாவின் கூடாரங்களை (Pavilion) அமைத்துக் கொள்ள இந்தியாவும் துபாயும் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

3) **சர்வதேச இந்தி மாநாடு 2018 (World Hindi Conference 2018):** சர்வதேச இந்தி மாநாட்டின் 11வது பதிப்பு **மொரீஷியஸ் நாட்டின் தலைநகரான போர்ட் லூயிசில்** (Port Louis, Mauritius) ஆகஸ்ட் மாதம் நடைபெற உள்ளது. இதன் கருத்துரு: **“வைஷ்விக் ஹிந்தி அவுர் பாரதிய சான்ஸ்கிரிடி”** (Vaishvik Hindi Aur Bharatiya Sanskriti) என்பதாகும்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

4) **சர்வதேச புத்த சமய மாநாடு (International Buddhist Conference):** 2562வது புத்த ஜெயந்தி விழாவினைக் கொண்டாடுவதற்காக (2562nd Buddha Jayanthi) ஏற்பாடு செய்யப்பட்ட இம்மாநாடு நேபாளத்தின் **லும்பினியில்** (Lumbini, Nepal), 2018 ஏப்ரல் மாதம் 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இதன் கருத்துரு: **"புத்தர் பிறந்த இடம் மற்றும் புத்தரின் அருட்கொடையும் உலகமும்"** (The birth place of Lord Buddha and the fountain of Buddhism and World).

5) **இந்தியா-வியாஸ்படேன் மாநாடானது** (India - Wiesbaden conference - 2018) 2018 ஏப்ரல் 16-17 ஆகிய தேதிகளில் புதுதில்லியில் நடைபெற்றது. இதன் கருத்துரு: **"ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலினுடைய தீர்மானம் 1540-ன் திறன்பட்ட அமலாக்கத்தினை நோக்கிய, அரசு - தொழிற்துறை கூட்டிணைவு மூலம் உலக விநியோக சங்கிலியைப் பாதுகாத்தல்"** (Securing Global suply chains through Government - Industry Partnership towards Effective Imlementation of UNSC Resolution 1540).

6) **உலகளாவிய ஆற்றல் மன்றம் (International Energy Forum):** உலகளாவிய ஆற்றல் மன்றத்தின் 16-வது கருத்தரங்கானது (Conference) 2018 ஏப்ரல் 10 முதல் 12 வரையிலான நாட்களில் **புது தில்லியில்** நடைபெற்றது. இதன் கருத்துரு : **"உலகளாவிய ஆற்றல் பாதுகாப்பின் எதிர்காலம் : மாற்றம், தொழில்நுட்பம், வர்த்தகம் மற்றும் முதலீடு"** (The Future of Global Energy Secrity: Transition, Technology, Trade and Investment).

7) **இந்திய கைபேசி மாநாடு (India Mobile Congress):** தொலைத்தொடர்புத் துறையானது (Department of Telecommunications) இந்திய கைபேசி மாநாட்டின் இரண்டாவது பதிப்பினைப் **புது தில்லியில்** 2018 அக்டோபர் மாதம் நடத்தத் திட்டமிட்டுள்ளது. இதன் கருத்துரு : **"புதிய டிஜிட்டல் எல்லைகள் - இணையச் செய், உருவாக்கு, புத்தாக்கம் செய்"** ("New Digital Horizons connect, create, innovate").

8) நீர் ஆதாரங்கள், நதி மேம்பாடு மற்றும் கங்கை நதி புத்தாக்கத்துக்கான மத்திய அமைச்சகமானது (Ministry of water Resources, River Develement & Ganga Rejuvenation) **முதலாவது நீர் ஆதாரங்களுக்கான கிழக்கு மாநிலங்களின் பிராந்திய கருத்தரங்கினை** (1st Regional Conference of eastern states on water Resources) **கொல்கத்தாவில்** நடத்தியது. நீர் ஆதாரங்கள் தொடர்பான சிக்கல்களையும் அவற்றின் தீர்வுகளையும் பற்றி இம்மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

9) **மலேரியா மாநாடு (Malaria Summit): 'மலேரியா நோ மோர்'** (Malayria No More) என்னும் இலாப நோக்கமற்ற நிறுவனமும் பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையும் (Bill and Melinda Gates Foundation) ஒன்றாக இணைந்து மலேரியா மாநாட்டினை **லண்டனில்** நடத்தியுள்ளன.

10) **25வது காமன்வெல்த் நாடுகளின் அரசுத் தலைவர்களுக்கிடையிலான சந்திப்பானது** (Commonwealth Heads of Government Meeting 2018 - CHOGM) **லண்டனில் 2018 ஏப்ரல் 20** அன்று நடைபெற்றது. இதன் கருத்துரு: **"பொதுவான எதிர்காலத்தை நோக்கி"** ("Towards a common Future")

11) புதிய தொழில் நுட்பங்களையும் புத்தாக்கச் சிந்தனைகளையும் பொது மக்களிடம் கொண்டு சேர்க்கும் விதமாக **"அடல் புதிய இந்தியா சவால்"** (Atal New India Challenge) எனும் முன்னெடுப்பினை நிதி ஆயோக் (NITI Aayog) தொடங்கியுள்ளது. இந்த முன்னெடுப்பானது **அடல் புத்தாக்கத் திட்டத்தின் கீழ்** (Atal Innovation Mission) தொடங்கப்பட்டுள்ளது.

12) **SCO அமைதித் திட்டம் (SCO Peace Mission):** செப்டம்பரில் ரஷ்யாவில் நடைபெற உள்ள SCO தீவிரவாதத் தடுப்புப் போர்ப் பயிற்சியில் (SCO counter-terror exercise) முதன் முறையாக இந்தியா, பாகிஸ்தான் நாடுகள் கூட்டாகக் கலந்து கொள்ள உள்ளன. மேலும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) அனைத்து உறுப்பு நாடுகளும் இப்பயிற்சியில் கலந்து கொள்ள உள்ளன.

13) **அரபு லீக் மாநாட்டின் (Arab League Summit 2018)** 29வது கருத்தரங்கானது 29th conference) சவுதி அரேபியாவின் **தாஹ்ரானில்** (Dhahran, Saudi Arabia) நடைபெற்றது.

14) **வுஹான் மாநாடு (Wuhan Summit):** சீனா மற்றும் இந்தியாவின் தலைவர்கள் மட்டுமே கலந்து கொண்ட **அலுவல் ரீதியல்லாத மாநாடானது (informal summit)** சீனாவின் வுஹான் நகரில் (Wuhan city) நடைபெற்றது.

15) **இந்தியா – நார்திக் மாநாடு (India - Nordic Summit):** முதலாவது இந்தியா-நார்திக் மாநாடானது சுவீடன் தலைநகர் **ஸ்டாக்ஹோமில் (Stockholm)** நடைபெற்றது. சுவீடன், நார்வே, பின்லாந்து, டென்மார்க், மற்றும் ஐஸ்லாந்து ஆகிய நாடுகள் நார்திக் நாடுகள் என்றழைக்கப்படுகின்றன. **1998-ம்** ஆண்டுக்குப் பிறகு இந்தியப் பிரதமர் ஒருவர் ஸ்டாக்ஹோம் செல்வது இதுவே முதன் முறையாகும்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## *திட்டங்கள்*

1) **சத்யாகிரஹா சே ஸ்வச்கிரஹா** (Satyagraha Se Swachhagraha) **: சம்பரன் சத்தியாகிரகப் போராட்டத்தின்** (Champaran Satyagraha) 100வது ஆண்டினை நினைவு கூறும் விதமாக **19 ஏப்ரல் 1917** 'சத்யாகிரஹா சே ஸ்வச்கிரஹா' என்னும் பிரச்சாரத்தினை, குடிநீர் மற்றும் சுகாதாரத்துக்கான மத்திய அமைச்சகமானது (Ministry of Drinking Water and Sanitation) புதுதில்லியில் தொடங்கி வைத்தது.

2) **ரூபாஸ்ரீ திட்டம்** (Rupashree Scheme)**:** ஏழைப் பெண்களுக்கான திருமண உதவித் திட்டமான 'ரூபாஸ்ரீ திட்டத்தினை' **மேற்கு வங்காள அரசு** தொடங்கி வைத்துள்ளது. இத்திட்டத்தின்படி ஒரு பெண் திருமணம் செய்து கொள்ளும் முன்னர் அவரது வங்கிக் கணக்கில் 25,000 ரூபாய் பணம் செலுத்தப்படும்.

3) **கோபார் தன் திட்டம் (GOBAR dhan Scheme):** குடிநீர் மற்றும் சுகாதாரத்துக்கான மத்திய அமைச்சகமானது (Ministry of Drinking Water and Sanitation) கோபார்தன் திட்டத்தினை ஹரியானாவின் **கர்னால் மாவட்டத்தில் (Karnal district)** 2018 ஏப்ரல் 30 அன்று தொடங்கி வைத்தது. கோபார்தன் என்பது **இயற்கை உயிரி வேளாண் வளங்களைத் திரட்டுதல்** [GOBAR - Galvanizing Organic Bio Agro Resources] என்பதன் சுருக்கமாகும்.

4) **கங்கா ஹரித்தீமா திட்டம் / கங்கை பசுமைத் திட்டம் (Ganga Hariteema Yojana/Ganga Greenery Scheme):** கங்கை நதியின் இரு கரைகளிலும் மரங்களை நடுவதன் மூலம் மண் அரிப்பினைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட இத்திட்டத்தினை **உத்திரப்பிரதேச மாநில அரசு** தொடங்கி வைத்துள்ளது. இதன் கருத்துரு: **"ஒரு நபர் ஒரு மரம்"** (One Person One Tree).

5) **போஷான் அபியான் (POSHAN Abhiyan)** [பிரதம அமைச்சரின் முழுமையான ஊட்டச்சத்து வழங்கும் திட்டம் (Prime Minister's Overarching Scheme for Holistic Nutrition)]: போஷான் அபியானின் கீழ் ஊட்டச்சத்து வழங்குவதில் உள்ள சவால்களைப் பற்றி விவாதிக்கும் தேசியக் குழுவின் முதலாவது சந்திப்பானது (1st meeting of National Council) புது தில்லியில் நடைபெற்றது. இத்திட்டத்தினை இராஜஸ்தானின் **ஜூன்ஜூனுவில் (Jhunjhunu)** 2018 **மார்ச்** மாதத்தில் பிரதமர் தொடங்கி வைத்தார்.

6) **கிராம ஸ்வராஜ் அபியான் (Gram Swaraj Abhiyan):** டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் பிறந்த தினமான ஏப்ரல் 14 அன்று இத்திட்டமானது தொடங்கி வைக்கப்பட்டது. மேலும் இத்திட்டம் ஒன்றாய்ச் சேருதல் மற்றும் தெவிட்டு நிலையை எட்டுதல் (Convergence and Saturation) என்னும் கொள்கை அடிப்படையிலான கிராமப்புற மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்படுகிறது.

7) **வன் தன் திட்டம் (Van Dhan Scheme):** பழங்குடி மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கான (Tribal's Economic Develoment) திட்டமாகக் கருதப்படும் வன் தன் திட்டமானது அம்பேத்கரின் பிறந்த தினமான ஏப்ரல் 14 அன்று **சத்தீஸ்கரின் பீஜப்பூரில்** (Bijapur, Chattisgarh) இருந்து பிரதம அமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டது.

8) **எட்டாவது பிராந்திய 3R மாநாடு (8th Regional 3R Forum):** ஆசியா-பசிபிக் பிராந்தியத்துக்கான எட்டாவது 3R மாநாடானது மத்திய வீட்டு வசதி மற்றும் நகாப்புற வளர்ச்சி அமைச்சகத்தினால் (Ministry of Housing and Urban Affairs) மத்தியப் பிரதேச மாநிலத்தின் **இந்தூரில்** (Indore, Madhya Pradesh) நடத்தப் பெற்றது. இங்கு 3R என்பது மறுபயன்பாடு, குறைவாக உபயோகித்தல் மற்றும் மறுசுழற்சி (Reuse, Reduce and Recycle) என்று பொருள்படும். இதன் கருத்துரு: **"3R**

**முறையைப் பயன்படுத்தி தூய்மையான குடிநீர், தூய்மையான நிலப்பகுதி, தூய்மையான காற்றினை அடைதல், மற்றும் திறன்மிக்க வகையில் வளங்களைப் பயன்படுத்துதல் - ஆசியா - பசிபிக் சமூகத்தினரின் 21-ம் நூற்றாண்டுக்கான தொலைநோக்குப் பார்வை”** (Achieving clean water, clean land and clean Air through 3R and Resource Efficiency - A 21st Century Vision for Asia-Pacific Communities).

9) **ராஷ்ட்ரிய கிராம் சுவராஜ் அபியான்** (Rashtriya Gram Swaraj Abhiyan): நாட்டின் உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இத்திட்டத்தினை, **தேசிய உள்ளாட்சி அமைப்புகள் தினமான 2018 ஏப்ரல் 24 அன்று** பிரதம அமைச்சர் தொடங்கி வைத்தார்.

10) **ராஷ்ட்ரிய அவிஷ்கார் அபியான் (Rashtriya Avishkal Abhiyan):** ஆறு முதல் பதினெட்டு வயது வரையிலான (6 to 18 years) குழந்தைகளுக்கு அறிவியல் (Science), கணிதம் (Mathematics) மற்றும் தொழில்நுட்பம் (Technology) ஆகிய துறைகளின் மீதான ஆர்வத்தினை வளர்த்து அத்துறைகளில் ஈடுபடச் செய்வதற்கான முயற்சிகளை எடுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேற்கண்ட துறைகளின் மீதான புரிதலை வளர்த்துக் கொள்ள ஏதுவாக உற்றுநோக்குதல் (Observation), பரிசோதித்துப் பார்த்தல் (experimentation), அனுமானித்தல் (inference drawing) மற்றும் மாதிரிகளை உருவாக்குதல் (Model building) போன்ற திறமைகளை செழுமைப்படுத்த இத்திட்டம் உதவுகிறது. மத்திய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சரான (Human Resource Develoment Minister) பிரகாஷ் ஜவடேகர் (Prakash Javadekar) இத்திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.

11) **ஆயுஷ்மான் பாரத் திட்டம் - முதலாவது ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு மையம்** (Ayushman Bharat Scheme - 1st Health & Wellness Centre): அண்ணல் அம்பேத்கரின் பிறந்த நாளையொட்டி **2018 ஏப்ரல் 14 அன்று சத்தீஸ்கரின் பீஜப்பூர்** மாவட்டத்தில் (Bijapur, Chattisgarh) **முதலாவது ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு மையத்தினை** (Health & Wellness Centre) பிரதமர் தொடங்கி வைத்தார். இம்மையம் தொடங்கப்பட்ட நிகழ்வானது ஆயுஷ்மான் பாரத் திட்டம் - தேசிய ஆரோக்கிய பாதுகாப்புத் திட்டம் (Ayushman Bharat Yojana - National Health Protection Mission (AB - NHPM) தொடங்கப்பட்டுவிட்டதினைக் குறிப்பதாக அமைந்துள்ளது.

12) **பரம்பரகத் கிரிஷி விகாஸ் யோஜனா (Paramparagat Krishi Vikas Yojana):** இயற்கை வேளாண்மை (Organic farming), மற்றும் மண் வள மேம்பாடு (Improving Soil Health) ஆகியவற்றை உறுதிசெய்வதற்காக தொடங்கப்பட்ட இத்திட்டமானது மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல்வாழ்வு அமைச்சகத்தின் (Ministry of Agriculture and Farmer's Welfare) கீழ் செயல்படுகிறது.

13) **பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா (Pradhan Mantri Fasal Bima Yojana)** திட்டத்தினை செயல்படுத்த உதவி புரியும் காப்பீட்டு நிறுவனங்களை

மாநிலங்களே உருவாக்கிக் கொள்வதற்கான அனுமதியினை மத்திய அரசு வழங்கியுள்ளது.

14) **தீன் தயாள் உபாத்யாயா கிராம் ஜோதி யோஜனா** (Deen Dayal upadhyaya Gram Jyoti Yojana) திட்டத்தின் கீழ் அனைத்து கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்குவதற்கான (Village Electrification) இலக்கினை மத்திய அரசு எட்டியுள்ளது. **2018 ஏப்ரல் 28 அன்று மணிப்பூரின் சேனாபதி மாவட்டத்திலுள்ள லெய்சாங் கிராமத்துக்கு** (Leisang Village, Senapathi district, Manipur) மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்ட பின்னர் மத்திய அரசின் இந்த இலக்கானது எட்டப்பட்டது.

15) **உன்னத் பாரத் அபியான் 2.0** (Unnat Bharat Abhiyan 2.0): மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் (Human Resource Develoment Minister) பிரகாஷ் ஜவடேகர் ‘உன்னத் பாரத் அபியான் 2.0’ திட்டத்தினை புதுதில்லியில் 2018 ஏப்ரல் 25 அன்று தொடங்கி வைத்தார் ஊரக மக்களின் தேவைகள் சார்ந்த உயர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான நிறுவனங்களை (Institutes of higher education in research & training) உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## பாதுகாப்பு & விண்வெளி

1) **பாதுகாப்புத் திட்டக் குழுவானது** (Defence Planning Committee) தேசியப் பாதுகாப்பு ஆலோசகரின் தலைமையின் (National Security Adviser) கீழ் செயல்படும் வகையில் மத்திய அரசினால் அமைக்கப்பட்டுள்ளது.

2) **சாகர் கவாச் (Sagar Kavach):** இந்தியக் கடலோரக் காவல் படையினரால் (Indian Coast Guard) நடத்தப்படும் சாகர் கவாச் கடலோரக் காவல் பாதுகாப்புப் பயிற்சியானது (Coastal security exercise-sagar kavach) கேரளாவில் இரண்டு நாட்கள் நடைபெற்றது.

3) **சக்ராவத் பயிற்சி (Chakravat Exercise):** இந்தியக் கடற்படையானது (Indian Navy) கேரள அரசுடன் இணைந்து நடத்திய **மனிதநேய உதவி மற்றும் பேரிடர் மீட்புப் பயிற்சியான** (Humanitarian Assistance and Disaster Relief - HADR) சக்ராவத் பயிற்சியானது **கொச்சி கடற்கரைப் பகுதியில்** நடைபெற்றது. ‘சக்ராவத்’ என்பது ‘சூறாவளி’ என்று பொருள்படுவதாகும்.

4) **ககன் சக்தி** 2018 **(Gagan Shakthi 2018): ‘கூட்டு வான்வழிப் போர் பயிற்சியான’** (Joint Air Combat Excercise) ககன் சக்தியினை **இந்தியா, பாகிஸ்தான் மற்றும் சீனா** ஆகிய மூன்று நாடுகளும் கூட்டாக இணைந்து 2018 ஏப்ரல் 10 முதல் 23 வரை நடத்திடத் திட்டமிட்டுள்ளன.

5) **சஹ்யோக் ஹையோப்ளாக் (Sahyog - Hyeoblyeog 2018)** என்னும் 2018-ம் ஆண்டிற்கான **இந்தியா மற்றும் தென்கொரியாவிற்கு** இடையேயான கடற்கொள்ளை

எதிர்ப்பு (Antipiracy), மீட்பு மற்றும் தேடல் (Search and Rescue) கூட்டுப் போர்ப் பயிற்சியானது வங்காள விரிகுடாக் கடலின் சென்னைக் கடற்கரையில் நடத்தப்பட்டது.

6) **இந்தியா மற்றும் கிர்கிஸ்தான்** (Kyrgysthan) ஆகிய இரு நாடுகளுக்கிடையிலான கூட்டு இராணுவப் பயிற்சியான **'கன்ஜார் V' (Khanjar V)** ஆனது **மிசோரத்தில்** நடைபெற்றது.

7) **ஹரிமாவு சக்தி** 2018 **(Harimau Shakti 2018): இந்தியா மற்றும் மலேசியா** ஆகிய இரு நாடுகளுக்கிடையிலான 2018-ம் ஆண்டுக்கான இரு தரப்பு இராணுவக் கூட்டுப்பயிற்சியான (Bilateral Joint Military Exercise) ஹரிமாவு சக்தியானது மலேசியாவின் ஹூலு லாங்கட்டிலுள்ள செங்காய் பெர்டிக்கில் (Sengai Perdik, Hulu Langat, Malaysia) நடைபெற்றது.

8) **ஃபோல் ஈகிள் (Foal Eagle)** என்பது **அமெரிக்கா (USA) மற்றும் தென் கொரியா** ஆகிய இரு நாடுகளுக்கிடையிலான கூட்டு இராணுவப் பயிற்சியாகும்.

9) **பாலைவனப் புலி (Desert Tiger 5) : ஐக்கிய அரபு அமீரகம் (UAE) மற்றும் மலேசியா** ஆகிய இரு நாடுகளுக்கிடையேயான கூட்டு இராணுவப் பயிற்சியான பாலைவனப் புலி 5' (Desert Tiger 5) துபாயில் (Dubai, UAE) நடைபெற்றது.

10) **IRNSS - 1I :** எட்டாவது பயண அமைப்பியல் செயற்கைக் கோளான (8th Navigation Satellite) IRNSS-1I ஆனது **PSLV - C41** ராக்கெட் மூலம் 2018 **ஏப்ரல் 12** அன்று ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து (Sriharikota) விண்ணிற்குச் செலுத்தப்பட்டது.

11) **RH-300 MKII:** விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தால் (Vikram Sarabhai Space Centre) உருவாக்கப்பட்ட RH-300 MKII என்னும் ஆய்வு ராக்கெட்டானது (Sounding rocket) கேரளா மாநிலம் திருவனந்தபுரத்திலுள்ள தும்பா இராக்கெட் ஏவுதளத்திலிருந்து (Thumba Rocket Launching Station) வெற்றிகரமாக விண்ணிற்குச் செலுத்தப்பட்டது.

12) **ரஷ்யாவின்** கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கும் **சர்மட் ஏவுகணையானது (Sarmat - Inter continental Ballistic Missile)** வெற்றிகரமாகச் சோதித்துப் பார்க்கப்பட்டது.

13) **F/A-18 சூப்பர் ஹார்னெட் போர் விமானங்களைத்** (F/A - 18 Super Hornet Fighter Aircraf) தயாரிப்பதற்கான ஒப்பந்தத்தில் போயிங் (Boeing), ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (Hindustan Aeronautics Limited) மற்றும் மஹிந்திரா பாதுகாப்பு அமைப்பு (Mahindra Defence System) ஆகிய நிறுவனங்கள் கையெழுத்திட்டுள்ளன.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

14) பாபா அணு ஆராய்ச்சி மையமானது (The Bhabha Atomic Research Centre) **'பாபா கவச்' (Bhabha Kavach)** என்னும் விலை மலிவான, இலகுவான அடுத்த தலைமுறை குண்டு துளைக்காத ஆடையினை (Next - generation bullet proof Jacket) வடிவமைத்துள்ளது.

15) **லிரிட் 2018 (Lyrid 2018):** லிரிட் (Lyrid 2018) என்னும் விண்கல் பொழிவானது (Meteor Shower) வட அரைக்கோளத்தில் (Northern hemisphere) கண்ணுக்குத் தெரியும் படியான வகையில் நிகழ்ந்தது. இந்த விண்கல் பொழிவானது **தாட்சர் வால் நட்சத்திரத்தின்** (Thatcher Comet) எஞ்சியுள்ள பகுதிகளால் (remains) நிகழ்ந்துள்ளது.

## *அறிவியல் & தொழில்நுட்பம்*

1) **தேசிய உயிர்மருந்தியல் திட்டம் (National Biopharma Mission):** இந்தத் திட்டமானது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தினால் (Ministry of Science and Technology) 2018 ஏப்ரல் 27 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. உயிர் மருந்தாக்கியல் (Biopharmaceuticals) துறையில் நடைபெறும் ஆராய்ச்சிகளை விரைவுபடுத்தி இத்துறையை மேம்படுத்துவதே தேசிய உயிர்மருந்தியல் திட்டத்தின் நோக்கமாகும்.

2) **புவி உயிர்-ஜீனோம் திட்டம் (Earth Bio-Genome Project):** இத்திட்டமானது, "புவி உயிர் - ஜீனோம் திட்டம் : எதிர்கால உயிர்களுக்காக உயிரினங்களை வரிசைமுறைப்படுத்துதல்" (Earth Bio-Genome Project : Sequencing life for the future of life) என்னும் தலைப்பின் கீழ் சர்வதேச அறிவியலாளர்களின் கூட்டமைப்பினால் (International consortium of Scientists) வெளியிடப்பட்டுள்ள ஒரு அறிக்கையின் (Paper) அடிப்படையில் தொடங்கப்பட்டதொரு திட்டமாகும்.

3) மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள அகஸ்திய மலை உயிர்க்கோள காப்பகப் பகுதியில் (Agasthyamalai Biosphere Reserve) அமைந்துள்ள **பொன்முடி மலையில் ஃபிம்பிரிஸ்டைலிஸ் அகஸ்தியமலேயன்சிஸ் (Fimbristylis agasthyamalaensis)** என்னும் **புதிய புல் போன்ற தோற்றம் கொண்ட தாவர இனத்தினை** ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

4) **நான்கு புதிய மீன்கொத்திப் பறவை இனங்கள் (4 New King fisher Species):** ஆந்திரப் பிரதேச மாநிலத்திலுள்ள **கிருஷ்ணா வன விலங்கு சரணாலயத்தில்** (Krishna Wildlife Sanctuary) பலவண்ண மீன்கொத்திப் பறவை (Pied Kingfisher), வெள்ளைத் தொண்டையுடைய மீன்கொத்திப் பறவை (White - throated Kingfisher), கறுப்புத் தலையுடைய மீன்கொத்திப் பறவை (Black-capped Kingfisher) மற்றும் பொதுவான மீன்கொத்திப் பறவை ஆகிய நான்கு புது வகையான மீன் கொத்திப் பறவைகள் கண்டறியப்பட்டுள்ளன.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

5) **கோவா மாநிலத்தில்** அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகளில் **பெஜேர்வரியா கோயேம்சி (Fejervarya Goemci)** என்னும் புதுவகையான **தவளை இனங்களை** (New frog species) ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்

6) **சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் (Sichuan)** 11.15 சென்டி மீட்டர் இறக்கை நீளம் கொண்ட **உலகின் மிகப்பெரிய இராட்சதக் கொசுவினை** (World's largest mosquito) ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

7) மருந்து எதிர்ப்புத் தன்மையை (Drug resistance) எதிர்த்துச் செயல்படும் திறனுடைய **ஒடிலோர் ஹாப்டின்ஸ் (Odilorhabdins)** என்றழைக்கப்படும் **புதியவகை நுண்ணுயிர்க் கொல்லிகளை** (antibiotics) ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

8) உலகளாவிய நைட்ரஜனின் புதிய மூலமானது (New source of Global Nitrogen) **புவிப்பாறைப் படுகைகளுக்கிடையே (Earth's bedrock)** இருப்பதனை ஆராயச்சியாளர்கள் அண்மையில் கண்டறிந்துள்ளனர்.

9) **உலகின் மிகச் சிறிய நிலப் பெரணி (World's Smallest Land Fern): குஜராத் மாநிலத்தின் டாங் மாவட்டத்தின்** (Dang district) மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள அஹ்வா காடுகளில் (Ahwa forest) மால்விஸ் ஆடர்ஸ் டங்க் பெரணி (Malvi's adder's - tongue fern) என்னும் உலகின் மிகச்சிறிய பெரணியை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். 1 செ.மீ மட்டுமே அளவுடைய இப்பெரணியானது ஓஃபியோகுளோசம் மால்வியே (Ophioglossum Malviae) குடும்பத்தைச் சேர்ந்தது.

10) **மெய்நிகர் காட்சியாக்கம்** 360° **(Virtual Reality 360°): கூகுள் (Google) நிறுவனமும் மத்திய சுற்றுலா அமைச்சகமும் (Ministry of Tourism)** கூட்டாக இணைந்து 360° கோணமும் காணத்தக்க வகையிலான மெய்நிகர் காட்சியாக்க காணொளியினை (360° Virtual Reality Video) 'வியத்தகு இந்தியா' (Incredible India) திட்டத்தின் கீழ் வெளியிட்டுள்ளன.

11) **நாசாவானது (NASA)** செவ்வாய்க் கோளில் (Mars) இறங்கும் வகையிலான மீயொலி வேக வான்குடை மிதவையினை (Supersonic Parachute) வடிவமைக்கும் திட்டமான **ASPIRE** (மேம்பட்ட மீயொலி வேக வான் குடை மிதவை ஆராய்ச்சி சோதனை - Advanced Supersonic Parachute Inflation Research Experiment) திட்டத்தினை வெற்றிகரமாக சோதித்துப் பார்த்துள்ளது.

12) **பார்க்கர் சூரிய துழாவி (Parker Solar Probe):** நாசாவானது (NASA) சூரியனை நோக்கித் தன்னுடைய முதலாவது திட்டமான பார்க்கர் சூரிய துழாவியினை (Parker Solal Probe) ஆகஸ்ட் மாதத்தில் அனுப்பத் திட்டமிட்டுள்ளது. இத்துழாவியானது சூரியனின் வெளிப்புற கொரோனா பகுதியினை (Outer Corona) ஆராய்ச்சி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

13) **உலகின் முதல் தொடு வில்லை (World's 1st Contact Lens):** மாற்றத்திற்கு உள்ளாகும் ஒளி நுண்ணறிவு தொழில் நுட்பத்தோடு கூடிய **(Transitions Light Intelligent Technology) அகுவ் ஓயாசிஸ்** (Acuuve Oasys) தொடு வில்லைகளின் பயன்பாட்டிற்கு அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்துப் பொருள் நிர்வகிப்பு அமைப்பானது (US Food and Drug Administration) அனுமதி வழங்கியுள்ளது. பிரகாசமான ஒளி வெளிச்சத்திற்கு உட்படும் போது தானாக இருட்டிடக் கூடிய வகையில் அமைந்த உலகின் முதல் தொடுவில்லை இதுவாகும்.

14) **உத்தம் செயலி (UTTAM APP):** நிலக்கரியின் தரத்தைக் கண்காணிப்பதற்காகவும் நிலக்கரி மேலாண்மையினை (Coal governance) மக்களிடம் கொண்டு செல்லவும் மத்திய நிலக்கரி அமைச்சகமானது உத்தம் செயலியை வடிவமைத்துள்ளது. உத்தம் என்பது **"வெட்டியெடுக்கப்பட்ட நிலக்கரியை மூன்றாம் தரப்பு மதிப்பிடுவதின் வெளிப்படைத் தன்மையினை வெளிக்கொணர்தல்"** (Unlocking Transparency by Third Party Assessment of Mined Coal) என அர்த்தமாகும்.

15) **09 - 3x சக்தி வாய்ந்த டேம்பிங் எக்ஸ்பிரஸ்:** மேம்படுத்தப்பட்ட மற்றும் இயந்திரமயப்படுத்தப்பட்ட இருப்புப் பாதை நிர்வகிப்பை (advanced mechanised track maintenance) உறுதி செய்யும் பொருட்டு இந்திய ரயில்வே மூன்று 09-3x என்ற சக்தி வாய்ந்த டேம்பிங் எக்ஸ்பிரஸ் இயந்திரங்களை (09-3x Dynamic Tamping express machines) அறிமுகப்படுத்தியுள்ளது.

16) 12000 குதிரைத் திறன் கொண்ட (Horse Power - HP) **இந்தியாவின் முதல் அதிவேக மின் இயந்திரமானது** (high speed electric locomotive) **பீகார் மாநிலத்தில் உள்ள** மதேபுரா எலக்ட்ரிக் எஞ்சின் தொழிற்சாலையிலிருந்து (Madhepura Electric Locomotive Factory) இயக்கி வைக்கப்பட்டது.

17) **இந்தியாவின் முதல் கடல் காற்றாற்றல் திட்டமானது** (1st offshore wind energy project of India) குஜராத் மாநிலத்தின் **காம்பே வளைகுடாப் பகுதியில்** (Gulf of Khambat) செயல்படுத்தப்பட இருக்கிறது. இத்திட்டமானது 1000 MW (1 GW) மின் உற்பத்தித் திறன் கொண்டதாகும்.

18) **சைபர் பாதுகாப்பு தொழில்நுட்ப ஒப்பந்தம் (Cyber Security Tech Accord):** உலக அளவில் தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்புத் துறைகளில் சிறந்து விளங்கும் 34 நிறுவனங்களுடன் **மைக்ரோசாஃப்ட் (Micro soft) மற்றும் முகநூல் (Face book)** ஆகிய இரண்டு நிறுவனங்களும் இணைந்து 'சைபர் பாதுகாப்புத் தொழில்நுட்ப ஒப்பந்தத்தில்' கையெழுத்திட்டுள்ளன. சைபர் குற்றவாளிகளின் (Cyber criminals) மூலம் நடைபெறும் சைபர் தாக்குதல்களிலிருந்து, இணையத்தைப் பயன்படுத்தும் பொது மக்களின் தகவல்களைப் பாதுகாப்பதே இவ்வொப்பந்தத்தின் நோக்கமாகும்.

## பொருளாதாரம்

1) ரிசர்வ் வங்கியின் முதலாவது, இரு மாதங்கட்கொரு முறை வெளிவரும் 2018-19ஆம் நிதி ஆண்டுக்கான பணக் கொள்கை அறிக்கை **(1st bimonthly monetary policy review for Financial year 2018-19)**:

| | |
|---|---|
| ➢ மறு கொள் முதல் வீதம் (Repo Rate) | 6% |
| ➢ நேர்மாற்று மறுகொள் முதல் வீதம் (Reverse Repo Rate) | 5.75% |
| ➢ பண இருப்பு விகிதம் (CRR) (Cash Reserve Ratio) | 4% |
| ➢ சட்டப்படியான ரொக்க வீதம் (SLR) (Statutory Liqudity Ratio) | 19.5% |
| ➢ வங்கி வீதம் (Bank Rate) | 6.25% |
| ➢ விளிம்பு நிலை வசதி வீதம் (CMSF) (Marginal Standing Facility Rate) | 6.25% |

2) ஆசிய மேம்பாட்டு வங்கி (Asian Develoment Bank) வெளியிட்டுள்ள **ஆசிய மேம்பாட்டுக் கண்ணோட்டத்தின் படி** (Asian Develoment Outlook) இந்தியப் பொருளாதாரமானது 2018-19 நிதி ஆண்டில் 7.3 விழுக்காடும், 2019-20 நிதி ஆண்டில் 7.6 விழுக்காடும் வளர்ச்சி அடையும் என கணிக்கப்பட்டுள்ளது.

3) நாட்டின் பொருளாதார நடவடிக்கையை மதிப்பீடு செய்யும் அளவீடாக இருந்த **மொத்த மதிப்புக் கூட்டல் முறையினை (Gross Value Added - GVA)** மாற்றி **மொத்த உள்நாட்டு உற்பத்தி (Gross Domestic Product)** முறையினையே மீண்டும் கொண்டு வர ரிசர்வ் வங்கி முடிவு செய்துள்ளது.

4) மத்திய நிதி அமைச்சகமானது அறிதிறன் பேசிகளின் (Smart Phones) உதிரிபாகங்களான அச்சிடப்பட்ட மின்சுற்றுப் பலகைகள் (Printed Circuit Boards), புகைப்படப் பெட்டிகள் (Camera modules) மற்றும் இணைப்பான்கள் போன்றவற்றிற்கு **10% இறக்குமதித் தீர்வை** (import duty) விதித்துள்ளது.

5) **பொருளாதார சுதந்திரத்திற்கான குறியீடு** 2018 **(Index of Economic Freedom 2018):** இக்குறியீடானது அமெரிக்காவைச் சேர்ந்த சிந்தனையாளர் குழுவான ஹெரிடேஜ் அறக்கட்டளையினால் (Heritage Foundation) வெளியிடப்பட்டது. இப்பட்டியலில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள 186 நாடுகளில் **இந்தியா 130வது இடத்திலும்** ஹாங்காக் (Hong Kong) முதல் இடத்திலும் உள்ளன.

6) **சர்வதேச பண நிதியத்தால் (International Monetary Fund - IMF):** 2018 ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்பட்ட **உலகப் பொருளாதாரக் கண்ணோட்ட அறிக்கையின் படி** (World Economic Outlook) **உலகின் ஆறாவது மிகப் பெரிய**

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

**பொருளாதாரமாக** (World's sixth largest economy) **இந்தியா** உருவெடுத்துள்ளது.

7) 2018-ம் ஆண்டுக்கான **சர்வதேச பத்திரிக்கைச் சுதந்திரத்துக்கான குறியீட்டில் (World Press Freedom Index 2018) இந்தியா** 138**வது** இடத்தில் உள்ளது. இப்பட்டியலில் மொத்தம் 180 நாடுகள் இடம் பெற்றுள்ளன. அவற்றினுள் நார்வே முதல் இடத்தில் உள்ளது.

8) **காமன்வெல்த் புத்தாக்கக் குறியீடு** 2018 **(Common wealth Innovation Index 2018):** இக்குறியீட்டினை உலக அறிவுசார் சொத்து நிறுவனம் (World Intellectual Property Organisation) மற்றும் உலக புத்தாக்க குறியீடு (Global Innovation Index) ஆகிய அமைப்புகள் கூட்டாக இணைந்து வெளியிட்டன. இக்குறியீட்டில், இடம் பெற்றுள்ள 53 நாடுகளில் **இந்தியா பத்தாவது இடத்திலும்** இங்கிலாந்து முதல் இடத்திலும் உள்ளன.

9) இந்தியக் கடன் பத்திரங்களில் **அந்நிய போர்ட்ஃபோலியோ முதலீட்டாளர்கள் (Foreign Portfolio Investors)** முதலீடு செய்வதற்கான விதிமுறைகளை ரிசர்வ் வங்கி தளர்த்தியுள்ளது.

10) **அல்காரிதம் வர்த்தகம் (Algorithm Trading):** பண்டமாற்று பங்கு பரிவர்த்தனைகளில் (Commodity derivative exchanges) அல்காரித வர்த்தகத்தினைப் பயன்படுத்துவதற்கு பங்குச் சந்தைப் பரிவர்த்தனை வாரியமானது (SEBI) புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அல்காரித வர்த்தகம் என்பது மேம்பட்ட கணக்கீட்டு மாதிரிகளைக் கொண்டு (advanced mathematical models) தானியங்கி முறை வர்த்தகத்தில் (automated executive of trade) ஈடுபடுவதாகும்.

11) அண்மையில் மத்திய அரசானது பண மோசடி தடுப்புச் சட்டத்தில் (Prevention of Money Laundering Act, 2002) சில திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளது. இத்திருத்தமானது நிதி சட்டம், 2018-ன் (Finance Act, 2018) மூலமாகச் செய்யப் பட்டது.

## விருதுகள்

1) **2017ம் ஆண்டுக்கான 65வது தேசிய திரைப்பட விருதுகள் 65th National Film Awards) 2018 ஏப்ரல் 13 அன்று அறிவிக்கப்பட்டன.**

| | |
|---|---|
| ➢ தாதாசாகேப் பால்கே விருது | வினோத் கண்ணா |
| ➢ தாதா சாகேப் பால்கே சிறப்பு விருது | அனுஷ்கா சர்மா |
| ➢ சிறந்த திரைப்படம் | Village Rockstars (அஸ்ஸாமிய மொழித் திரைப்படம்) - இதன் இயக்குநர் மற்றும் தயாரிப்பாளர்-ரிமா தாஸ் (Rima Das) |
| ➢ சிறந்த தமிழ்மொழி திரைப்படம் | To Let (இயக்குநர்-செழியன்) |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

| | |
|---|---|
| ➢ சிறந்த நடிகர் | ரித்தி சென் (Riddhi Sen) [நகர் கிர்தன் (Nagar Kirtan) என்னும் வங்க மொழி திரைப்படத்துக்காக] |
| ➢ சிறந்த நடிகை | ஸ்ரீதேவி [மாம்(Mom) என்ற இந்தி மொழிப்படத்தில் நடித்ததற்காக] |
| ➢ சிறந்த இயக்குநர் | ஜெயராஜ் - மலையாளம் [பயானகம் (Bhayanakam) என்ற மலையாள மொழிப் படத்தை இயக்கியதற்காக] |
| ➢ சிறந்த இசையமைப்பாளர் | A.R. ரஹ்மான் (காற்று வெளியிடை திரைப்படத்திற்காக) |

2) **கான்டெக்கோரேசியோன் விருது (Condecoracion Award):** பூமத்திய கினியா (Equatorial Guinea) நாட்டினால், அதன் குடிமகன் அல்லாதவர்களுக்கு (Non-citizen) வழங்கப்படும் மிக உயரிய விருதான கான்டெக்கோ ரேசியோன் விருதானது இந்தியக் குடியரசுத் தலைவர் **ராம்நாத் கோவிந்த்** அவர்களுக்கு வழங்கப்பட்டது.

3) **அமெரிக்காவின் நியூயார்க் டைம்ஸ் நாளிதழுக்கு** (Newyork Times Newspaper) **2018ம் ஆண்டுக்கான புலிட்சர் விருது** (Pulitzer prize 2018) வழங்கப்பட்டது. செய்திகளை அளிப்பதில் சிறப்பாகப் பணி புரிந்தமைக்காக இவ்விருது அந்நாளிதழுக்கு வழங்கப்பட்டுள்ளது.

4) புதுதில்லியில் நடைபெற்ற 65வது தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் (65th National Film Awards) **திரைப்பட உருவாக்கத்திற்கு மிகவும் நட்பு பாராட்டும் மாநிலத்துக்கான விருதினை** (Most Film Friendly state Award 2017) **மத்தியப் பிரதேச மாநிலம்** பெற்றுள்ளது.

5) எகிப்து நாட்டைச் சேர்ந்த புகைப்படக் கலைஞரான **முஹம்மது அபு ஜெயித்** (Mahmoud Abu Zeid) என்ற **ஷாவ்கானுக்கு** (Shawkan) **யுனெஸ்கோ சர்வதேச பத்திரிக்கை சுதந்திரத்திற்கான விருது** (UNESCO Press Freedom Prize 2018) வழங்கப்பட்டுள்ளது.

6) K.K.பிர்லா அறக்கட்டளையினால் (K.K.Birla Foundation) அளிக்கப்படும் சரஸ்வதி சம்மன் விருதானது (Saraswathi Samman Award 2017) குஜராத் கவிஞரான **சிதன்ஷூ யாஷஸ் சந்த்ராவுக்கு** (Sitanshu Yashaschandra) வழங்கப்பட்டுள்ளது. 2009-ல் வெளிவந்த இவரின் கவிதைத் தொகுப்பான **வகார் (Vakhar)** என்ற நூலுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

## *நியமனங்கள் மற்றும் ஆளுமைகள்*

1) **உலகின் முதல் மைக்ரோ தொழிற்சாலை (World's first Microfactory):** ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த **வீணா சஹஜவல்லா** (Veena Sahajawalla) என்பவர் உலகிலேயே முதல் முறையாக மைக்ரோ



SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

தொழிற்சாலையைத் தொடங்கியுள்ளார். இது எலக்ட்ரானிக் கழிவுகளை (e-waste) பயனுள்ள பொருட்களாக மாற்றி மறுசூழற்சி செய்து பயன்படுத்த உதவுகின்றது.

2) **இந்து மல்ஹோத்ரா (Indu Malhotra):** பார் கவுன்சிலில் வழக்கறிஞராக இருந்து நேரடியாக உச்சநீதிமன்ற நீதிபதியாகப் பொறுபேற்ற முதல் பெண் வழக்கறிஞர் என்ற பெருமையை இந்து மல்ஹோத்ரா பெறுகின்றார்.

3) **மாநிலங்களவையின் தலைவராக (Leader of Rajya Sabha)** மத்திய நிதியமைச்சர் **அருண் ஜேட்லி** மறுநியமனம் செய்யப்பட்டுள்ளார்.

4) சிக்கிம் மாநில முதல்வரான **திரு. பவன் குமார் சாம்லிங் (Mr. Pawan Kumar Chamling)** இந்தியாவிலேயே மிக நீண்ட காலம் பதவி வகித்த மாநில முதலமைச்சர் (Longest serving chief minister of India) என்ற பெருமையைப் பெற்றுள்ளார். இவர் 23 ஆண்டுகள் 4 மாதங்கள் மற்றும் 17 நாட்கள் தொடர்ந்து ஆட்சியில் இருந்துள்ளார். இதற்கு முன் மேற்கு வங்க மாநிலத்தின் முதல்வராக இருந்த ஜோதி பாசு (Jyoti Basu) 1977 ஜூன் 21 முதல் 2000-ம் ஆண்டு நவம்பர் 6 வரை 23 ஆண்டுகள் பதவியில் இருந்ததே சாதனையாக இருந்தது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை திரு.மு.கருணாநிதி அவர்களே நீண்ட காலம் முதலமைச்சராக (18 ஆண்டுகள், 293 நாட்கள்) பொறுப்பு வகித்துள்ளார்.

5) மத்தியத் தொழிலகப் பாதுகாப்புப் படையின் (Central Industrial Security Force - CISF) இயக்குநர் ஜெனரலாக (Director General) **ராஜேஷ் ரஞ்சன்** (Rajesh Ranjan) நியமிக்கப்பட்டுள்ளார்.

6) **வங்கிகள் வாரியக் குழுவின் தலைவராக** (Chairman of Banks Board Bureau) **பானு பிரதாப் சர்மா** (Bhanu Pratap Sharma) அவர்களை மத்திய நிதி அமைச்சகம் (Ministry of Finance) நியமித்துள்ளது.

7) ஐக்கிய நாடுகள் அமைப்பின் அரசியல் விவகாரங்கள் துறையின் (UN Political Affairs) முதல் பெண் தலைவராக அமெரிக்காவின் **ரோஸ்மேரி டைகார்லோ** (Rosemary Dicarlo) நியமிக்கப்பட்டுள்ளார்.

8) ஐக்கிய நாடுகளினுடைய உலக சுற்றுலா அமைப்பின் (UN World Tourism Organization) நல்லெண்ணத் தூதராக (ambassador) **லியோனல் மெஸ்ஸி** (Lionel Messi) நியமிக்கப்பட்டுள்ளார்

9) **ஆசிய பாவோ மன்றத்தின் தலைவராக (Boao Forum for Asia - BFA)** தலைவராக தென் கொரியாவைச் சேர்ந்த **பான்-கி-மூன் (Ban ki-moon)** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

10) **நாடுகளின் புதிய அதிபர்கள்:**

| நாடு | அதிபர் (President) |
|---|---|
| ➢ பராகுவே (Paraguay) | மரியோ அப்டோ பெனிடஸ் (Mario Abdo Benitez) |
| ➢ சியர்ரா லியோன் (Sierra Leone) | ஜூலியஸ் மாடா பியோ (Julius Maada Bio) |

## நூல்கள்

1) **"India Gandhi: A Life in Nature"** என்னும் நூலினை மூத்த காங்கிரஸ் தலைவரான **ஜெய்ராம் ரமேஷ்** (Jairam Ramesh) எழுதியுள்ளார்.

## விளையாட்டு

1) **மத்திய சட்ட ஆணையமானது** (Law Commission of India) இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (Board of Control for Cricket in India - BCCI) மற்றும் அனைத்து வகையான கிரிக்கெட் சங்கங்களையும் **தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ்** (Right to Information Act) கொண்டு வர பரிந்துரை செய்துள்ளது.

2) **21வது காமன்வெல்த் போட்டிகள் (21st Commonwealth Games 2018):**

➢ 2018 ஏப்ரல் 4 முதல் 15 வரை ஆஸ்திரலியாவின் குயின்ஸ்லாந்தில் உள்ள கோல்ட் கோஸ்ட்டில் (Gold Coast, Queensland, Australia) நடைபெற்றன.

| | |
|---|---|
| ➢ கருத்துரு (Theme) | **"அமைதியை கட்டமைப்பாகும் காமன்வெல்த்"** (A Peace - building Commonwealth) |
| ➢ சின்னம் (Mascot) | **"போரோபி"** (Borobi) |
| ➢ குறிக்கோள் (Motto) | **"கனவினைப் பகிருங்கள்"** (Share Your Dreams) |
| ➢ இலச்சினை (Emblem) | **"தொடுவான நிழல் மற்றும் தங்கக் கடற்கரையின் இயற்கை அமைப்பு"** ("Silhouttee of the skyline and landscape of Gold Coast") |
| ➢ போட்டித்தொடருக்கான பாடல் | **"Welcome to Earth"** [ஆஸ்திரேலியப் பாடகர் டெல்டா கூட்ரெமினால் (Delta Goodrem பாடப்பட்டது] |

➢ இந்தப் போட்டியில் **71** காமன்வெல்த் நாடுகள் மற்றும் ஆட்சிப் பகுதிகள் (Common wealth Nations and Territories) கலந்து கொண்டன.

➢ மொத்த விளையாட்டுகள் : **18 வகை ஆட்டங்கள்** மற்றும் **7 பாரா ஆட்டங்கள்** (Para Sports)

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

- இறுதிப் பதக்க அட்டவணையில் (Final Medal Tally) மொத்தம் **39** காமன்வெல்த் நாடுகள் மற்றும் ஆட்சிப் பகுதிகளே இடம் பெற்றிருந்தன.
- இந்த காமன்வெல்த் போட்டிகளில் **கடற்கரை கைப்பந்தாட்டம்** (Beach Volley ball), **பாரா டிரையத்லான்** (Para Triathlon) மற்றும் **பெண்களுக்கான ரக்பி ஆட்டம்** (Women's Rugby Sevens) ஆகியவை புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. காமன்வெல்த் போட்டிகளில் முதன் முறையாக ஆண்கள் மற்றும் பெண்களுக்கான ஆட்டங்கள் சமமான அளவில் (equal number of men's and women's medal events) நடத்தப்பட்டன.
- **ஆஸ்திரேலியா** 198 பதக்கங்களை வென்று (தங்கம் - 80, வெள்ளி - 59, வெண்கலம் - 59) **முதல் இடத்தைப் பிடித்தது.**
- **இங்கிலாந்து** 136 பதக்கங்களை வென்று (தங்கம் - 45, வெள்ளி - 45, வெண்கலம் - 46) **இரண்டாவது இடத்தைப் பிடித்தது.**
- **இந்தியா** 66 பதக்கங்களுடன் (தங்கம் - 26, வெள்ளி - 20, வெண்கலம் - 20) **மூன்றாவது இடத்தைப் பிடித்தது.**
- இந்தியா சார்பாக **கொடியேந்திச் சென்ற வீரர்கள் (Flag Bearers):**
    - தொடக்க விழா : **பி.வி. சிந்து**
    - நிறைவு விழா : **மேரி கோம் (Mary Kom)**
- அடுத்த காமன் வெல்த் போட்டிகள் 2022-ம் ஆண்டில் **இங்கிலாந்தின்** பிர்மிங்ஹாமில் (Birmingham, England) நடைபெற உள்ளன
- **ஒன்றுக்கும் மேற்பட்ட பதக்கங்களை வென்றவர்கள் (Multi medalist) : இந்தியாவிலிருந்து :**

| | |
|---|---|
| மானிகா பத்ரா (Manika Batra) (டேபிள் டென்னிஸ்) | 4 பதக்கங்கள் (2 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலம்) |
| சாய்னா நேவால் (Saina Nehwal), (பேட்மிண்டன்) | 2 தங்கப் பதக்கங்கள் |

**ஒட்டுமொத்த வீரர்களில் (Overall)** ஒன்றுக்கும் மேற்பட்ட பதக்கங்களை வென்றவர்கள் :

| | | |
|---|---|---|
| மிட்ச் லார்க்கின் (Mitch Larkin) | நீச்சல் (Swimming) | 5 தங்கம் |
| நைல் வில்சன் (Nile Wilson) | ஆர்ட்டிஸ்டிக் ஜிம்னாஸ்டிக்ஸ் (Artistic Gymnastics) | 6 பதக்கங்கள் (4 தங்கம், 2 வெள்ளி) |
| டையமான்டோ எவ்ரிபீடு (Diamanto Evripidou) | ரித்மிக் ஜிம்னாஸ்டிக்ஸ் (Rhythmic Gymnastics) | 6 பதக்கங்கள் (4 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலம்) |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

- 19 வயதே நிரம்பிய ஆஸ்திரேலிய குத்துச் சண்டை வீரரான (Australian Boxer) **தேலா ராபர்ட்சன்** (Taylah Robertson) **51 kg** எடைப்பிரிவில் இந்த காமன்வெல்த் போட்டியின் **முதலாவது தங்கப் பதக்கத்தினை** வென்றார்.

**தங்க பதக்கங்கள்** (Gold Medals) :

| | |
|---|---|
| பளு தூக்குதல் (Weightlifting) | ➢ மிராபாய் சானு (Mirabai Chanu) - 48kg பிரிவு (தொடக்க நாளிலேயே தங்கப் பதக்கத்தினை வென்று இந்தியாவின் பதக்க வேட்டையைத் தொடங்கி வைத்தார்)<br>➢ சதிஷ்குமார் சிவலிங்கம் (Sathish Kumar Sivalingam) - 77 kg பிரிவு. (இவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்)<br>➢ பூனம் யாதவ் (Punam Yadav) - 69 kg பெண்கள் பிரிவு<br>➢ வெங்கட் ராகுல் ரகலா (Venkat Rahul Ragala) - 85 kg ஆண்கள் பிரிவு |
| குத்துச் சண்டை (Boxing) | ➢ மேரி கோம் (Mary Kom) - 45 kg முதல் 48 kg வரையிலான பிரிவு [அவருடைய முதலாவது காமன்வெல்த் பதக்கத்தைப் (Debut award in communication games) பெற்றுள்ளார்]<br>➢ கவுரவ் சோலங்கி (Gaurav Solanki) - 52 kg<br>➢ விகாஸ் கிருஷ்ணன் (Vikas Krishnan) - 75 kg |
| டேபிள் டென்னிஸ் (Table Tennis) | ➢ மானிகா பத்ரா - (காமன்வெல்த் போட்டிகளில், டேபிள் டென்னிஸ் ஆட்டத்தில் தங்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை).<br>➢ இந்தியப் பெண்கள் டேபிள் டென்னிஸ் அணியானது (Indian Women's Table Tennis Team) சிங்கப்பூரை வீழ்த்தி காமன்வெல்த்தில் முதலாவது தங்கப் பதக்கத்தினை வென்றது.<br>➢ இந்திய ஆண்கள் டேபிள் டென்னிஸ் அணியானது (Indian men's Table Tennis Team) நைஜீரியாவை (Nigeria) வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்றது. |
| | ➢ வினேஷ் போகாத் (Vinesh Phogat) - 50 kg பெண்கள் பிரிவு |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

| | |
|---|---|
| ஃப்ரீஃஸ்டைல் மல்யுத்தம் (Freestyle Wrestling) | ➢ பஜ்ரங் பூனியா (Bhajrang punia) - 65 kg<br>➢ சுமித் மாலிக் (Sumit Malik) - 125 kg ஆண்கள் பிரிவு<br>➢ ராகுல் அவாரே (Rahul Aware) - 57kg |
| ஈட்டி எறிதல் (Javelin Throw) | ➢ நீரஜ் சோப்ரா (Neeraj Chopra) - (ஈட்டி எறிதலில் தங்கம் வென்ற முதல் இந்திய வீரர்) |
| துப்பாக்கிச் சுடுதல் (Shooting) | ➢ அனிஷ் பன்வாலா (Anish Bhanwala) - (15 வயது) - 25 மீட்டர் ரேபிட் ஃபயர் பிரிவு (Rabid fire)<br>➢ தேஜஸ்வினி சாவந்த் (Tejaswini Sawant) - 50 மீட்டர் பிரிவு<br>➢ ஸ்ரேயாஷி சிங் (Shreyashi Singh) - டபுள் டிராப் மகளிர் துப்பாக்கிச் சுடுதல் (Double trap women Shooting). |
| பேட்மிண்டன் (Badminton) | ➢ சாய்னா நேவால் (Saina Nehwal) - மகளிர் ஒற்றையர் பிரிவு (Women's single)<br>➢ சாத்விக் ரங்கிரெட்டி (Satwik Ranki reddy) & அஸ்வினி பொன்னப்பா (Ashwini Ponnappa) - கலப்பு இரட்டையர் (Mixed Doubles) [முதன் முறையாக கலப்பு இரட்டையர் பிரிவினர் தங்கம் பெறுகின்றனர்] |
| ஏர் பிஸ்டல் (Air pistol) | ➢ மனு பாக்கர் (Manu Bhaker) - 10 மீ பெண்கள் பிரிவு<br>➢ ஜித்து ராய் (Jitu Rai) - 10 மீ ஆடவர் பிரிவு<br>➢ ஹீனா சித்து (Heena Sidhu) - 25 மீ |

**வெள்ளிப் பதக்கங்கள் (Silver Medals):**

| | |
|---|---|
| பேட்மிண்டன் (Badminton) | ➢ P.V. சிந்து (சாய்னா நேவாலுக்கு எதிராக)<br>➢ கிடாம்பி ஸ்ரீகாந்த் (Kidambi Srikanth) |
| ஸ்குவாஷ் (Squash) | ➢ தீபிகா பல்லிக்கல் மற்றும் ஜோஷ்னா சின்னப்பா (மகளிர் இரட்டையர் ஸ்குவாஷ்)<br>➢ தீபிகா பல்லிக்கல் மற்றும் சவுரவ் கோஷல் (Sourav Ghosal) [கலப்பு இரட்டையர் ஸ்குவாஷ்] |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

| | |
|---|---|
| குத்துச்சண்டை (Boxing) | ➢ மணிஷ் கவுசிக் (Manish Kaushik) - 60kg ஆண்கள் பிரிவு<br>➢ அமித் பாங்கல் (Amit phangal) - 46-49kg ஆண்கள் பிரிவு |
| டேபிள் டென்னிஸ் (Table Tennis) | ➢ மானிகா பத்ரா (Manika Batra) மற்றும் மவுமாதாஸ் (Mouma Das) - பெண்கள் இரட்டையர் பிரிவு |
| மல்யுத்தம் (Wrestling) | ➢ P. குருராஜா - 56kg ஆண்கள் பிரிவு (வெள்ளிப் பதக்கம் வென்ற இந்தியாவின் முதல் வீரர்)<br>➢ மவுசம் காத்ரி (Mausam Khatri) - 97kg ஆண்கள் பிரிவு<br>➢ பூஜா தண்டா (Pooja Dhanda) - 57kg பெண்கள் பிரிவு<br>➢ பிரதீப் சிங் (Pradeep Singh) - 105 kg ஆண்கள் பிரிவு<br>➢ பமிதா குமாரி (Babitha Kumari) - 53kg பெண்கள் பிரிவு |
| வட்டு எறிதல் (Discuss Throw | ➢ சீமா பூனியா (Seema Punica) - 60.41 மீட்டர் தூரம் எறிந்துள்ளார். |
| துப்பாக்கிச் சுடுதல் (Shooting) | ➢ மெகுலி கோஷ் (Mehuli Ghosh) - 10 மீட்டர்<br>➢ ஹீனா சித்து (Heena Sidhu) - 10 மீட்டர்<br>➢ தேஜஸ்வினி சாவந்த் (Tejaswini Sawant) - 50 மீட்டர் |

**வெண்கலப் பதக்கங்கள் (Bronze Medals):**

| | |
|---|---|
| பாரா பவுர்லிஃப்டிங் (Para Powerlifting) | ➢ சச்சின் சவுத்ரி (Sachin Chaudry) (அதிக எடை கொண்ட பாரா பவர்லிஃப்டிங் ஆண்கள் பிரிவு) |
| டேபிள் டென்னிஸ் (Table Tennis) | ➢ மானிகா பத்ரா மற்றும் G. சத்யன் (கலப்பு இரட்டையர்)<br>➢ சரத் கமல் (Sharath kamal)<br>➢ ஹர்மீத் தேசாய் மற்றும் சனில் சங்கர் ஷெட்டி (Harmeet Desai & Sanil Shankar Shetty) [ஆடவர் இரட்டையர்] |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

| | |
|---|---|
| பேட்மிண்டன் (Badminton) | ➢ அஸ்வினி பொன்னப்பா மற்றும சிக்கி ரெட்டி - மகளிர் இரட்டையர் (Ashwini Ponnappa and Sikki Reddy) |
| மல்யுத்தம் (Wrestling) | ➢ சோம்வீர் (Somveer) - 86kg<br>➢ திவ்யா கக்ரன் (Divya Kakran) - 68kg<br>➢ கிரண் (Kiran) - 76kg |
| வட்டு எறிதல் (Discuss Throw) | ➢ நவ்ஜீத் தில்லான் (Navjeet Dhillon) - 57.43 மீட்டர் |
| துப்பாக்கிச் சுடுதல் (Shooting) | ➢ அங்குர் மிட்டல் (Ankur Mittal) - டபுள் டிராப் துப்பாக்கிச் சுடுதல்<br>➢ ரவிக் குமார் (Ravi kumar) - 10m |
| ஏர்பிஸ்டல் (Air pistol) | ➢ ஓம் மிதர்வால் (Om Mitharwal) [50 மீ மற்றும் 10மீ ஆகிய இரு போட்டிகளில் வெண்கலம் வென்றுள்ளார்]<br>➢ அபுர்வி சந்தேலா (Apurvi chandela - 10m) |
| பளுதூக்குதல் (Weightlifting) | ➢ தீபக் லாத்தர் - 69 kg [ஹரியானாவைச் சேர்ந்த இவர் காமன் வெல்த் போட்டிகளில் பதக்கம் வென்ற இளைய வீரராவார்]<br>➢ விகாஸ் தாக்கூர் (Vikas Thakur) - 94 kg |

3) **மியாமி ஓபன் டென்னிஸ் 2018 (மார்ச் 19 – ஏப்ரல் 1):**

| | |
|---|---|
| ➢ ஆடவர் ஒற்றையர் (Men's Singles) | ஜான் இஸ்னர் (John Isner) - அமெரிக்கா [வெற்றி] எதிர்<br>அலெக்சாண்டர் ஸ்வரவ் (Alexander Zverev) - ஜெர்மனி (தோல்வி) |
| ➢ ஆடவர் இரட்டையர் (Men's Doubles) | மைக் பிரையான் (Mike Bryan) மற்றும் பாப் பிரையான் (Bob Bryan) - அமெரிக்கா (வெற்றி) எதிர் காச்சன் லோவ் (Khachanlov) மற்றும் ரூப்லவ் (Rublev) [ரஷ்யா] (தோல்வி) |
| ➢ மகளிர் ஒற்றையர் (Women's Singles) | சோலேன் ஸ்டீபன்ஸ் (Solane Stephens) - அமெரிக்கா [வெற்றி] எதிர்<br>ஜெலீனா ஓஸ்டா பென்கோ (Jelena Ostapenko) [லாத்வியா] (தோல்வி) |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

| | |
|---|---|
| ➢ மகளிர் இரட்டையர் (Women's Doubles) | பார்டி (Barty)- ஆஸ்திரேலியா மற்றும் வான்டேவேகே (Vandewaghe) - அமெரிக்கா (வெற்றி) எதிர் கிரெஜ்சிகோவா (Krejcikova) மற்றும் சினாய் கோவா (Sinaikova) - [செக்கோஸ்லோ வேகியா |

4) **ஆசிய மல்யுத்தப் போட்டிகளில்** (Asian Wrestling Championship) தங்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்னும் சிறப்பினை **நவ்ஜோத் கவுர்** பெற்றுள்ளார். இப்போட்டியானது கிர்கிஸ்தானின் **பிஷ்கெக் நகரில்** (Bishkek, Kyrgyzstan) நடைபெற்றது.

5) தைவான் தலைநகர் தைபேயில் (Taipei) நடைபெற்ற சண்டாய்ஸி ஏடிபி சேலஞ்சர் தொடரில் (Santaizi ATP Challenger 2018) இந்திய டென்னிஸ் வீரரான **'யுகி பாம்ப்ரி'** (Yuki Bhambri) சாம்பியன் பட்டம் வென்றார்.

6) ஐஸ்லாந்தின் ரெய்க்ஜாவிக் நகரில் (Reykjavik, Iceland) நடைபெற்ற **'Tournoi world cup satellite fencing championship'** போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த **C.A. பாவனா** வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

7) **ரோலெக்ஸ் மான்டே கார்லோ மாஸ்டர்ஸ் 2018 :** டென்னிஸ் [Rolex monte carlo Masters 2018 : Tennis]

| | |
|---|---|
| ஆடவர் ஒற்றையர் (Men's singles) | ரஃபேல் நடால் (Rafael Nadal) - ஸ்பெயின் [வெற்றி] எதிர் கெய் நிஷிகோரி (Kei Nishikori) - ஜப்பான் (தோல்வி) |
| ஆடவர் இரட்டையர் (Men's Doubles) | மைக் பிரையான் (Mike Bryan) மற்றும் பாப் பிரையான் (Bob Bryan) [அமெரிக்கா] எதிர் ஆலிவர் மராச் (Oliver Marach) - ஆஸ்திரியா (Austria) மற்றும் மேட் பேவிக் (Mate Pavic) - குரோஷியா (தோல்வி) |

8) தொழில்முறை கால்பந்தாட்ட வீரர்கள் சங்கத்தின் (Professional Footballers Association) 2017-18-ஆம் ஆண்டுக்கான **சிறந்த கால்பந்தாட்ட வீரருக்கான** (Player of the year 2017-2018) விருது எகிப்து நாட்டைச் சேர்ந்த **முகம்மது சாலாவுக்கு** (Mohammed Salah) வழங்கப்பட்டது.

9) சென்னையைச் சேர்ந்த **பிரஜ்னேஷ் குன்னேஸ்வரன்** (Prajnesh Gunneswaran) 2018 ஏப்ரல் 29 அன்று நடந்த ஏடிபி சேலஞ்சர் சர்க்கியூட் (ATP Challenger circuit) போட்டியில் தனது **முதலாவது டென்னிஸ் ஒற்றையர் பட்டத்தை** (1st ever singles tennis title) வென்றுள்ளார்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

10) 11வது இந்திய பிரீமியர் லீக் போட்டிகள் (Indian Premier Leagve (2018) 2018 ஏப்ரல் 7 அன்று மும்பையில் தொடங்கின.

## முக்கிய தினங்கள்

| தினம் (Day) | நிகழ்வு (Events) | கருத்துரு/முக்கியத்துவம் (Themes /Significance) |
|---|---|---|
| ஏப்ரல் 1 | ஒடிசா தினம் / உத்கல் திவாஸ் (Odisha Day Utkal Diwas) | ஒருங்கிணைந்த வங்காளம் - பீகார் - ஒரிசா மாகணத்திலிருந்து (Combined Bengal - Bihal - Orissa Province) 1936 - ம் ஆண்டு ஒடிசா தனி மாநிலமாகப் பிரிந்ததை நினைவு கூறும் வகையில் இந்த தினம் கொண்டாடப்படுகிறது. |
| ஏப்ரல் 2 | உலக மதி இறுக்கத்திற்கான விழிப்புணர்வு தினம் (World Autism Awarness Day) | "மதி இறுக்கத்துடன் உள்ள பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் அதிகாரமளித்தல்" (Empowering women and girls with autism) |
| ஏப்ரல் 5 | தேசிய கடல்சார் தினம் (National Maritime Day) | "இந்தியக் கப்பல்துறை: வாய்ப்புகளின் பெருங்கடல்" (Indian shipping - An Ocean of opportunity) |
| ஏப்ரல் 6 | வளர்ச்சி மற்றும் அமைதிக்கான சர்வதேச விளையாட்டு தினம் (International Day of Sport for Developmet and Peace) | 1896-ம் ஆண்டு கிரீஸ் நாட்டின் ஏதென்ஸ் நகரில் முதலாவது நவீன ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் (first modern Olympic games) தொடங்கியதை இத்தினம் குறிக்கிறது. |
| ஏப்ரல் 7 | உலக சுகாதார தினத்தின் (World Health Day) 70வது ஆண்டு விழா | கருத்துரு : "உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பு : அனைவருக்கும், அனைத்து இடத்திலும்" ("Universal Health Coverage : everyone, everywhere"). முழக்கம் (Slogan): 'அனைவருக்கும் ஆரோக்கியம்' ("Health for all") |
| ஏப்ரல் 10 | உலக ஹோமியோபதி தினம் (World Homeopathy Day) | இந்த தினத்துக்காக நடைபெற்ற இரு நாள் மாநாட்டின் கருத்துரு : 40 ஆண்டுகளுக்கான அறிவியல் ஆய்வு: புத்தாக்கம், பரிமாணம், முன்னேற்றம்" (Innovate, Evolve, Progess : Exploring Science 40 years). |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

| | | |
|---|---|---|
| ஏப்ரல் 11 | தேசிய பாதுகாப்பான தாய்மை தினம் (National Safe Motherhood Day) | "மரியாதைக்குரிய மகப்பேறுப் பராமரிப்பு" (Respectful Maternity Care) |
| ஏப்ரல் 12 | உலக வான் போக்குவரத்து மற்றும் விண்வெளி பயண தினம் (World Aviation and Cosmonautics Day) | மனிதனின் முதல் விண்வெளிப் பயணத்தினை (First ever flight of a human in space) நினைவு கூர்வதற்காக இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது. |
| ஏப்ரல் 17 | உலக குருதி உறையாமை நோய் தினம். (World Hemophilia Day) | "அறிவினைப் பகிர்தல் நம்மை வலிமையாக்கும்" (Sharing Knowledge makes us stronger) |
| ஏப்ரல் 18 | உலக பாரம்பரிய தினம் (World Heritage Day) | "தலைமுறைகளுக்கான பாரம்பரியம்" (Heritage for Generations) |
| ஏப்ரல் 19 | உலக கல்லீரல் தினம் (World liver day) | "கல்லீரல் நோய்களைக் கண்டறிவதில் புதிய முறைகளைக் கண்டுபிடித்தல், நிலையாக்குதல் மற்றும் சிகிச்சையளித்தல்" (Riding new waves in liver diagnosis, staging and treatment). |
| ஏப்ரல் 21 | குடிமைப் பணிகள் தினம் (Civil Service Day) | "எதிர்காலத்தை வடிவமைக்கும் புதிய இந்தியா" (New India Shaping the Future) |
| ஏப்ரல் 21 | சர்வதேச படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க தினம் (World Creativity and Innovation Day) | பல துறைகளில் படைப்பாக்கச் சிந்தனையை (Creative Multi discilinary thinking). ஊக்குவிப்பதன் மூலம் எதிர் காலத்தில் நமக்குத் தேவையான நீடித்த வளர்ச்சியை அடைதல். |
| ஏப்ரல் 22 | உலக புவி தினம் (World Earth Day) | "பிளாஸ்டிக் மாசுபாட்டினை நிறுத்துதல்" [End Plastic Pollution] |
| ஏப்ரல் 23 | உலக புத்தகம் மற்றும் காப்புரிமை தினம் (World Book and Copyright Day) | உலக மக்களிடையே புத்தக வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கவும், புத்தகங்களின் வெளியீடு மற்றும் காப்புரிமையினை (Copyright) மேம்படுத்தவும் இந்த தினமானது கொண்டாடப்படுகிறது. |
| ஏப்ரல் 24 | தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் (National Panchayat Raj Day) | அரசியல் அதிகாரத்தினை சமுதாயத்தின் கடைநிலை வரை பரவலாக்கம் செய்தல். |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

| | | |
|---|---|---|
| ஏப்ரல் 25 | உலக மலேரியா தினம் (World Malaria Day) | "மலேரியாவை அழித்தொழிக்கத் தயாராகுதல்" ("Ready to beat Malaria) |
| ஏப்ரல் 26 | உலக அறிவுசார் சொத்துரிமை தினம் (World Intellectual Property Day) | "மாற்றத்திற்கு சக்தி அளித்தல் : புத்தாக்கம் மற்றும் படைப்பாற்றலில் பெண்களின் பங்கேற்பு" (Powering change: Women in Innovation and Creativity) |
| ஏப்ரல் 29 | சர்வதேச நடன தினம் (International Dance Day) | சர்வதேச மேடைக்கலைகளுக்கான நிறுவனத்தின் நடனக் குழுவினால் (Dance Committee of the International Theater Institute) ஏற்படுத்தப்பட்ட இந்த தினமானது நடனக் கலையின் சிறப்புகளை உலகெங்கும் பறைசாற்றுகிறது. |

- ஏப்ரல் 23 முதல் 29 வரை தமிழ் நாட்டில் 29வது சாலை பாதுகாப்பு வாரம் (Road Safety Week) அனுசரிக்கப்பட்டது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS